# தலைமன்னார் இராணுவ முகாம் கைப்பற்றப்பட்டது
# 38 இராணுவத்தினர் பலி; ஆயுதங்களும் மீட்பு

(யாழ்ப்பாணம்)

தலைமன்னார் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் நேற்றுக் கைப்பற்றப்பட்டது. சுமார் 150க்கு மேற்பட்ட இராணுவ வீரர்களைக் கொண்ட இம்முகாம் நேற்று அதிகாலை 2-00 மணியிலிருந்து 4-00 மணி வரை இடம்பெற்ற 2 மணி நேர உக்கிரமான மோதலின் பின் முற்றாகக் கைப்பற்றப்பட்டது.

நேற்று முன்தினம் காலை,

(8ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 3-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 ஆனி: 2 துல் ஹஃதா: பிறை: 22 இதழ்: 124

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 16-06-1990

University of Jaffna, Sri Lanka
RECEIVED
1990-6-18
Periodicals Division

## கடற்படை முகாம் புலிகள் வசம்

(யாழ்ப்பாணம்)

தலைமன்னார் இறங்குதுறை கடற்படை முகாம், நேற்றுப் பலத்த தாக்குதலின் பின் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பல மணி நேரம் நடைபெற்ற இத்தாக்குதலில் கடற்படையினர் பலர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இருவர் வீரமரணமடைந்தனர். ஒருவர் காயமடைந்தார். (153)

# ★ அமைச்சர் ஹமீத் சென்ற சில மணி நேரத்தில்
# பலாலி சுற்று வட்டாரங்களில்
# இராணுவம் பெரும் தாக்குதல்

## 5,000 குடும்பங்கள் வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமைச் சுற்றியுள்ள கிராமங்களில் நேற்றுப் பிற்பகல் முதல் ஹெலி ஷெல் தாக்குதல்கள் நடைபெற்று வருகிறது. இதையடுத்து 5000 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 25,000 மக்கள் அகதிகளாக அப்பகுதிகளை விட்டு இரவோடு இரவாக வெளியேறியுள்ளனர்.

அமைச்சர் ஹமீத் பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டு பலாலியிலிரு து புறப்பட்ட சிலமணி நேரத்துக்குள் இராணுவத்தினர் இத் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## நேற்றைய பேச்சில் இணக்கம் இல்லை
## அமைச்சர் ஹமீத் இன்று வருகிறார்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அமைச்சர் ஜனாப் ஹமீதுக்கும் இடையிலான நேற்றைய சந்திப்பில் இணக்கம் எதுவும் காணப்படவில்லை. மேலதிக முக்கிய சந்திப்பிற்காக அமைச்சர் ஹமீத் இன்று காலை 9-00 மணிக்கு மீண்டும் யாழ்ப்பாணம் வருகிறார்.

நேற்று நல்லூரில் நடைபெற்ற சந்திப்பைத் தொடர்ந்து அமைச்சர் ஹமீத் நேற்று மாலை கொழும்பு திரும்பினார். நேற்றுக் காலை 10-30 மணியளவில் அமைச்சர் ஹமீத் பலாலியில் வந்திறங்கியதும் அவரை விடுதலைப் புலிகள் நல்லூருக்கு அழைத்துவந்தனர். நல்லூரில் 4 மணித்தியாலம் இரு பகுதியினருக்குமிடையில் கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது.

இக்கருத்துப் பரிமாறல்களில் தெரிவிக்கப்பட்ட இரு தரப்பு விடயங்கள் தொடர்பாகவும் இரு தரப்பினரும் தத்தம் தலைமைப்பீடத்துடன் கலந்தாலோசித்த பின்னர் இன்று காலை மீண்டும் சந்திப்பதென முடிவுசெய்யப்பட்டது.

இக்கருத்துப் பரிமாறலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா (மாத்தயா), விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரத்தினம் யோகி, விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் பேபி சுப்பிரமணியம், யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் பங்குபற்றினார்கள். அரச தரப்பில் அமைச்சர் ஹமீத் மாத்திரம் பங்குபற்றினார். இச்சந்திப்பில் போர் தொடங்கிய சூழ்நிலை, அதன் பின்னணி, போர் நிறுத்தம் பற்றியும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரியவருகிறது. (153)

## வவுனியாவில் கடும் மோதல்

வவுனியா நகரில் இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் கடும்மோதல் நடைபெற்றுவருகிறது. வவுனியா இராணுவ முகாமுக்கும் வவுனியா காமினி வித்தியாலயத்துக்குமிடையில் கடும் மோதல் நடைபெற்று வருகிறது.

இதனைத் தொடர்ந்து வவுனியா நகரிலுள்ள மக்கள் வெளியேறி வருகிறார்கள். மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் அகதிகளாக அயற்கிராமங்களுக்கு சென்றுள்ளனர்.

## செட்டிகுளத்தில் 7 படையினர் பலி!

வவுனியா மாவட்டத்திலுள்ள செட்டிகுளம் இராணுவமுகாம் தாக்கப்பட்டபொழுது ஏழு இராணுவத்தினர் பலியானார்கள். புலிகள் தரப்பில் ஒரு போராளி காயபபட்டார் என்றும் தெரியவரும்றது.

## புனானையில் பீரங்கித் தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எல்லைக் கிராமமான புனானையில் கவசவாகனம், பீரங்கி வண்டி ஆகியவற்றின் தாக்குதல் காரணமாக பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

(8-ம் பக்கம் பார்க்க)

### வடக்கு கிழக்கில்
## 6 ராணுவ முகாம்கள் புலிகளிடம் வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் கடந்த ஐந்து தினங்களில் வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள ஆறு இராணுவ முகாம்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்முனை, கற்குடா இராணுவ முகாம்களும், திருகோணமலை மாவட்டத்திலுள்ள தோப்பூர், திரியாய், கிண்ணியா ஆகிய இராணுவ முகாம்களும், வடக்கில் தலைமன்னார் இராணுவமுகாமும் புலிகளிடம் வீழ்ச்சியடைந்துள்ளன.

மேலும் வடக்கு-கிழக்கு பகுதியில் பல இராணுவ முகாம்கள் சுற்றிவளைக்கப்பட்டு கடும் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது. (153)

## இந்தியா தலையிடாது?

(கொழும்பு)

இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் இடம்பெறும் சம்பவங்களில் இந்தியா சம்பந்தப்படுத்திக் கொள்ளவிரும்பவில்லை என்று 'இந்து' பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது.

அங்கு நிகழ்ந்து கொண்டிருக்கும் சம்பவங்கள் இலங்கையின் உள்நாட்டு விவகாரம் என்று இந்திய அரசாங்கம் கருதுவதாக இப்பத்திரிகையின் முதற் பக்கத்தில் வெளியான செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 1,400 தமிழ் இளைஞர் கொழும்பில் கைது!

(கொழும்பு)

கொழும்பில் தொடர்ந்தும் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு வருகின்றார்கள். கடந்த 3 தினங்களாக 1,400க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ந்தும் கொழும்பில் தமிழர்கள் பெருமளவு வசிக்கும் பகுதிகளில் பொலிஸார் இளைஞர்களைக் கைதுசெய்வதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (153)

## மாகாண சபை திருத்தச்சட்டம்

(கொழும்பு)

மாகாண சபைகள் திருத்தச் சட்ட வரைவு அரசமைபிற்கு முரணானது அல்ல என்று உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் சபாநாயகர் ஜனாப் அல்ஹாஜ் முகமட் நேற்று இதனைத் தெரிவித்தார்.

இதையடுத்து வடக்கு கிழக்கு மாகாணசபை கலைப்பு தொடர்பாக அடுத்த ஓரிரு தினங்களில் ஜனாதிபதி அறிவிக்கலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### இலவசம் நாவல்

மீரா வெளியீடுகள் பூம் பனி மலர்கள், ராதையின்நெஞ்சம், முடிவல்ல ஆரம்பம், சங்கரன் நாவல்களை வாங்கியவர்கள் இணைக்கப்பட்டிருக்கும் கூப்பன் களைக் கொடுத்து ''கானகத் தின் கானம்'' நாவலை இலவச மாகப் பெறுங்கள். ஸ்ரீகாந் புத் தகசாலை, ராஜன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி-3991)

### தவறிவிட்டது

தேவமணி கனகசபாபதி ஐயர் ஆகிய எமது ஜனசக்தி புள்ளி (கூப்பன், உணவு முத் திரை புதன் (13-06-90) நாவலர் வீதியில் அப்பையா கடைச் சந்திக்கும், மனோகரா தியேட்டர் சந்திக்கும் இடை யில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் ஈழநாடு காரி யாலயத்திலோ, உதவி அர சாங்க அதிபர் பணிமனை யிலோ அல்லது ஸ்ரீ வரதன், 175, நாவலர் வீதி என்ற விலாசத்தில் கொடுக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப் படும். (சி-3992)

### இடமாற்றம்

328, நாவலர் ரோட்டில் நடைபெற்ற Vispa Engineering Aid Hall, 419, ஸ்ரான்லி ரோட்டில் (பெற்றோலியம் கூட் டுத்தாபனத்திற்கு முன்பாக) மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். (சி-3988)

### வகுப்பு

Radio - T. V. Deck, Air Conditioning, Refrigeration, வயறிங், வெல்டிங், வைன்டிங், பிளம்பிங், மோட்ட மெக் கானிசம், Typing, Spoken English புதிய பிரிவுகள் ஆரம்ப மாகின்றன. குறுகிய காலத் தில் சிறந்த செய்முறை அறி முறைப் பயிற்சிகளுடன் அங்கீ கரிக்கப்பட்ட சான்றிதழும் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall, 419, ஸ்ரான்லி ரோட், (பெற்றோலி யம் கூட்டுத்தாபனத்திற்குமுன் பாக) யாழ்ப்பாணம். (சி-3990)

### விற்பனைக்கு

ஒல்லாந்திலிருந்து இறக்கு மதி செய்த (Crimson Globe) பீற்றூட் விதை விவசாய ஆய்வுகூட அனுமதிபெற்றது. உயர் விளைச்சல் தரவல்லது. 200 கிறும் டின் ரூபா 150-00. தேவைக்கு பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப் பாணம். (சி-3986)

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### வகுப்புக்கள்

6 — 11ம் ஆண்டு வரை (O/L) கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ், சமூகக்கல்வி ஆகிய பாடங்கள் விரைவில் புதிதாக ஆரம்பமாகின்றது. அனுபவமுள்ள ஆசிரியர்களால் கற்பிக்கப்பட்டு மீட்டல் வகுப் புக்களும் நடத்தப்படும். Vispa Engineering Aid Hall, 419, ஸ்ரான்லி ரோட், (பெற்றோலி யம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (சி-3989)

## ஐயனார் கோவில் உற்சவம்

[யாழ்ப்பாணம்]

அனலைதீவு அரிகரபுத்திர ஐயனார்கோவில் வருடாந்த மஹோற்சவம் அடுத்த மாதம் 23ம் திகதி கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 5ம் திகதி இரதோற்சவ மும், அடுத்தநாள் காலை தீர்த் தோற்சவமும் நடைபெறும்.

## ''ஆலயத்தை மையமாக வைத்து சைவ நெறிகளைவளர்க்கவேண்டும்

(தென்மராட்சி)

''எமது சைவக் கலை கலாச் சாரம் சமய நெறிகளை ஆல யத்தை மையமாக வைத்தே வளர்க்கவேண்டும். இதற்கு கல்வி கேள்வி, பக்தி நெறி, சமய ஆசாரம் மிக்க சிவாச் சாரியர்கள் இப்பணியில் முன் னின்று உழைக்க வேண்டும். இப்பணியைத்திறம்படநடாத் தும் கு. ஜெகதீஸ்வர சிவாச் சாரியார் பாராட்டிற்கும், போற்றுதற்கும் உரியவரா வர்.''

விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பிர தம சிவாச்சாரியார் சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்களுக்கு பட்டம்அளிக்கப்பட்டபாராட் டுப் பெருவிழாவின்போதுசாவ கச்சேரி நீதவான் திரு. மு. திருநாவுக்கரசு இவ்வாறு கூறி ஞர்.

திரு. திருநாவுக்கரசு தொடர்ந்து பேசும்போது; ''ஆலயம் சிறக்க அவ்வூர் சிறக் கும். அந்தணர் சிறப்பர். வானம் மும்மாரி பொழியும். வனம் சிறக்கும், தானமும்தவ மும் ஓங்கும். அதனால்தான் தேவாரமும் முதலில் வாழ்க அந்தணர் என்று வாழ்த்தி யது.

பிறமதத்து மதகுருமாருக்கு அம்மதங்கள்தரும் மரியாதைக் குரிய கௌரவத்தை நாமும் நமது சிவாச்சாரியார்கட்குத் தருகின்றோமா என்று எண்ண வேண்டும்.

''ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆற்றும் சைவப்பணி போற்று தற்குரியது. இத்தகையோரை அவர் தம் வாழ்நாளில் ஊக்கு வித்து உயர்வுபெறுவது சைவ சமயத்தவரது கடமை''

திரு. த. தம்பிராசா வர வேற்புரை கூறினர். சி சிதம் பரநாதக் குருக்கள் பொன் ஞடை போர்த்திக் கௌரவித் தார்.

தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத்தலைவர் திரு. நா. முத்தையா, சாவகச்சேரி நகர விசேட ஆணையாளர் திரு த. நவரத்தினராசா, ப. மஹா கணபதி சர்மா, கிராமசேவை அதிகாரி திரு. சி. கந்தசாமி உட்பட்ப் பலர் வாழ்த்துரை வழங்கினர். (81)

## புங்குடுதீவில் குண்டும் குழியுமான வீதிகள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவுப் பகுதிகளில் உள்ள பிரதான வீதிகள் கடந்த பல வருடங்களுக்கு மேலாகத் திருத்தியமைக்காத தினல் பெரும் குண்டும் குழியு மாக காணப்படுகிறது.

மகாவித்தியாலய வீதி, தம் பர் கடைச் சந்தி, இருபிட்டி, தபாற் கந்தோர்ப் பகுதி போன்ற பிரதானவீதிகள் படு மோசமான நிலையில் காட்சிதரு கின்றன.

அது மட்டுமல்லாமல் இந்த வீதியால் நாளாந்த சேவை களை மேற்கொண்டு வரும வாகனங்கள் அரச தனியார் காணிகளுக்கூடாக வீதிகளை விட்டுத் தரை இறங்கிச்செல் வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. (101)

## ''வர்த்தகர்களுக்கு பாவனையாளர் நலத்தில் அக்கறை இருக்கவேண்டும்''

(நெடுந்தீவு)

''வர்த்தகர்கள் தனியே இலாபத்தை மட்டும் நோக் காகக் கொண்டவர்களாக இருக்காது பாவனையாளரது நலத்திலும் அக்கறை உள்ள வர்களாக இருத்தல்வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட் டம், கிளிநொச்சி மாவட்டம் ஆகியவற்றின் உணவு, மருந் துக் தரக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர் திரு. ரி. மகா தேவா தெரிவித்தார்.

நெடுந்தீவு பலநோக்கு கூட் டுறவுச் சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற உணவு விநியோகம் சம்பந்த மான கருத்தரங்கில் பலநோக் குக்கூட்டுறவுச்சங்க கிளை முகாமையாளர்கள், தனியார் வர்த்தகர்கள், உத்தரவுபெற்ற வியாபாரிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண் டனர்.

நெடுந்தீவு, பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கணக்காளர் திரு. அ. கோபாலபிள்ளை தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெற்றது.

திரு. ரி. மகாதேவா தொடர்ந்து உரையாற்றுகை யில், ''சில உற்பத்தியாளர் கள் தரம் குறைந்த பொருட் களையே தயாரித்து விற்பனவு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளனர். இவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட் டுள்ளனர். தரம் குறைந்த, கலப்படப் பொருட்களாலும், தேவையற்ற சாயப் பொருட் களைக் கலந்து உணவுப் பண் டங்களைத் தயாரிப்பதாலும் புற்றுநோய் போன்ற தீராத நோய்கள் வர ஏதுவாக அமை கின்றது. இதில் வியாபாரி

(8-ம் பக்கம் பார்க்க)

## தேவை

நிறுவனம் ஒன்றிற்கு இரவில் பொறுப்பான பணியைச் செய்வதற்கு அனுபவமுள்ளவரும், பொறுப் பும் கடமை உணர்ச்சியும் உள்ள பணியாள் ஒரு வர் தேவை. சகல விபரங்களுடன் 20-06-90க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் ஏ-804, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (ஏ-804)

## புளியங்கூடல் இந்து இளைஞர் சங்கப் பொதுக்கூட்டம்

17-06-90ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற் பகல் 3-00 மணிக்கு மேற்படி சங்க மண்டபத் தில் சங்கத் தலைவர் திரு. ந. நாகராசா அவர் கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

புளியங்கூடல் கிராமப் பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வ. போசராசா
செயலாளர்

(சி-3976)

## நிர்வாகிகள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல் லூரி பாடசாலை அபிவிருத் திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் கல்லூரி அதிபரும், சங்கத்தலை வருமான திருமதி தே. தம்பி ராசா தலைமையில் நடை பெற்றது.

பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய் யப்பட்டனர்.

தலைவர்: திருமதி தே. தம்பி ராசா, உப தலைவர்: பொ. கந்தசாமி, இணைச்செயலாளர் கள்: எஸ். கனகசிங்கம், திருமதி ம. தர்மராஜா, பொருளாளர்: க. நடராசா, செயற்குழு உறுப்பினர்களாக 16பேர் தெரிவு செய்யப்பட்ட டனர். (72)

ஃ ஃ ஃ

(தென்மராட்சி)

மந்துவில் கேலம் இராச இராசேஸ்வரி அம்பாள் திருப் பணிச் சபை உறுப்பினர் தெரிவுக்கான பொதுக்கூட்டம் ஆதீன கர்த்தாவும், ஆலயபரி பாலன சபைத் தலைவருமான சிவஸ்ரீ ப. வேதக்குட்டி குருக் கள் தலைமையில் நடைபெற் றது.

பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகதெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: வே. இரத்தினசிங்கம், உபதலை வர்: சி. மாணிக்கவாசகர், செயலாளர்; ச. விநாயக மூர்த்தி, உப செயலாளர்: வ. கந்தையா, பொருளா ளர்: சிவசுதன், கணக்காய் வாளர் செ. சிவநாயகம், நிர் வாக சபை உறுப்பினர்களாக மேலும் [illegible] தெரிவு செய்யப் பட்டனர்.

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாண வர் ஒன்றிய உறுப்பினர்கட் கான பொதுக்கூட்டம் இம் மாதம் 20-ம் திகதி புதன் கிழமை யாழ். பல்கலைக்கழகத் தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் ஒன்றிய உறுப்பினர்கள் தவருது கலந்து கொள்ளுமாறு வேண் டப்படுகின்றனர்.

## மன்னாரில் மீன்பிடி மகாநாடு

(மன்னார்)

மன்னாரில் மாவட்ட மீன் பிடி அலுவலகத்தால் மாவட் டத்திலுள்ள கடற்றொழிலா ளர் சங்கங்களின் பிரதிநிதி களை அடக்கிய ஓர் மாவட்ட மீன்பிடி மகாநாடு நடைபெற் றது.

மன்னார் விடுதலைப்புலி களின் மக்கள் முன்னணி அலு வலகப் பொறுப்பாளர் திரு. துசியந்தன் தலைமையில் இம் மகாநாடு நடைபெற்றது.

அரச அதிபர், திட்டப் பணிப்பாளர், கடற்றொழில் அதிகாரிகள் உதவி அரச அதி பர்கள் கடற்றொழில் திணைக் களத்தைச் சேர்ந்த ஊழியர் கள் ஆகியோர் இம் மாநாட்டில் கலந்து கொண் டார்கள். (85)

## நினைவஞ்சலி





திரு. திருமதி பெரியதம்பி கந்தையா
(சிவலிங்கப்புளியடி)
(10-06-1907—16-06-86) (22-08-1917—28-05-85)

''விதானை சங்கரியா வளவு'',
718, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

P. K. பாலசிங்கம்,
&
சகோதர சகோதரிகள்.

(சி-3983)

## 'ஈழநாடு' வாரமலர்

17- 06 - 1990

★ பிறமொழி ஒலிக ளுக்கு தமிழில் புதிய வடிவங்கள்.
★ வல்லரசுப்போட்டி யும் ஆயுத உற்பத் தியும்.
★ பெஞ்சன் வாழ்க்கை (சிறுகதை)
★ உயர்வுக்கும் தாழ் வுக்கும் வித்திட்ட உணர்வுகள்.
★ கம்பஹா எம். பி யின் பார்வையில் யாழ். பிரதேசம்.
★ மலையகத்தின் இயற்கை தோற் றம்.
★ கிழக்கும் மேற்கும் (தொடர்கவிதை)
★ புதுக்கவிதை- புதியபார்வை.
★ வைத்திய கலாநிதி பதிலளிக்கிறார்
★ நிர்வாகத்தில் நிகழ்பவை
★ தமிழ் இலக்கிய சுவை.
★ ஞாயிறு மஞ்சரி

மற்றும் வழக்கமான அம்சங்கள்

விலை ரூபா 4/-

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காஷ்மீர் வன்செயலை நிறுத்த

# பாகிஸ்தானை வற்புறுத்த

# உலக நாடுகளிடம் கோரிக்கை

(புதுடில்லி)

**காஷ்மீரில் வன்செயல்களைத் தூண்டிவிடும் நடவடிக்கைகளைக் கைவிடுவதற்குப் பாகிஸ்தானை வற்புறுத்துமாறு இந்தியா உலக நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

பாகிஸ்தானின் பொறுப்பற்ற செயல்களினால் தெற்காசிய பிராந்தியத்தில் அரசியல் உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் இந்தியா சுட்டிக் காட்டியுள்ளது.

அமைதிப் பேச்சுவார்த்தைகள்மூலம் எல்லாப் பிரச்சனைகளையும் தீர்த்துக்கொள்ள இந்தியா விரும்புகிறது என்றும், காஷ்மீர்ப் பிரச்சனைத் தீர்வுக்குக் கட்டுப்படத்தக்க வரம்பாக சிம்லா ஒப்பந்தம் விளங்குவதாகவும் இந்திய அதிகாரி ஒருவர் கூறினார்.

இதேவேளை காஷ்மீர்ப் பிரச்சனையில் நிதானத்தைக் கடைப்பிடிக்குமாறும், இராணுவ நடவடிக்கை எதுவும் நிகழாமல் தடுத்துவிடுமாறும் இந்தியாவையும், பாகிஸ்தானையும் சூடான் கேட்டுள்ளது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நட்புணர்வுகளை வளர்ப்பதற்கும், இரு பகுதியினரிடையேயும் நிலவும் கருத்துவேறுபாடுகளை ஒதுக்கி வைப்பதற்கு இது துணைபுரியும் என்றும் சூடான் தெரிவித்துள்ளது. (து)

# கட்டணம் செலுத்தாத அதிபர்கள் மீது நடவடிக்கை

(அச்சுவேலி)

தொண்டமனாறு வெளிக்கள நிலையத்திற்கு செலுத்த வேண்டிய பரீட்சைக்கட்டணத்தை இதுவரை செலுத்தாத பாடசாலை அதிபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படலாமென தெரியவருகிறது.

1984ம் ஆண்டு தொடக்கம் நிலையத்திற்கு செலுத்தப்படாத பரீட்சைக்கட்டணமாக 60 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்டதொகை பாக்கியாக உள்ளது.

இதனை வசூலிப்பதற்கு ஐந்து பேர் கொண்ட நடவடிக்கை குழு நியமிக்கப்பட்டுள்ளது: இதுவரை பரீட்சைக் கட்டணத்தை செலுத்தாத பாடசாலைகளின் விபரம் அந்தக்காலப்பகுதியில் அதிபர்களாக கடமைபுரிந்தவர்களின் விபரம் மேல் நடவடிக்கைகளுக்காக கல்வித்திணைக்களம், கோட்டக்கல்வி அலுவலங்களுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளது.

பரீட்சைக் கட்டணத்தை செலுத்துவதற்கு சில அதிபர்கள் முறைகேடான கணக்கு முறையை கையாண்டிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம். (72)

# தென்னுபிரிக்க ராணுவத்தில் சேர வெள்ளையர்கள் ஆர்வம்

[கேப்டவுன்]

தென்னுபிரிக்காவில் வெள்ளையர் இனத்தைச் சேர்ந்த பலர் பரா இராணுவத்தில் சேர்ந்து இராணுவப் பயிற்சிபெறுவதில் ஆர்வம்காட்டி வருகிருர்கள்.

இங்கு நாற்பதாண்டுகள் கடைப்பிடிக்கப்பட்டுவந்தஇன ஒதுக்கல் கொள்கையில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் வெள்ளையர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளன.

இதனுலே அவர்கள் தீவிர இராணுவப் பயிற்சிபெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன ஒதுக்கல் கொள்கையைப் பாதுகாக்கும் பொருட்டே தாங்கள் இராணுவப் பயிற்சி பெற்றுவருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அரசாங்கமும்ஆபிரிக்கதேசிய காங்கிரஸும் எங்களுக்கு ஏற்றவையல்ல. எங்கள் நாட்டைக் காக்கவேண்டுமென்ருல் நாம் இராணுவப்பயிற்சி பெற வேண்டுமென்றும் அவர்கள் கூறினுர்கள். (து)

# ''மாணவரின் கல்வி மேம்பாட்டிற்கு முன்னின்று உழைப்போம்''

(நாவற்குழி)

''மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு நாம் முன்னின்று உழைப்போம்''

இவ்வாறு தென்மராட்சி விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு. க. ரஞ்சன் தெரிவித்தார்.

நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆங்கிலதினவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதிபர் திரு. த. முத்துக்குமாரசாமிதலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. ரஞ்சன் தொடர்ந்து பேசுகையில் ''நாம் கடந்த காலத்திலும்சரி, இப்பொழுதும்சரி, வருங்காலத்திலும்சரி எமது எதிர்கால சந்ததியினரான மாணவர்கள் கல்வி சீர்குலையும் வகையில் எந்தவொரு செயலிலும் ஈடுபடப்போவதில்லை. தொடர்ந்தும் மாணவர்களுடைய கல்விக்காக முன்னின்று உழைப்போம். மாணவர்களின் கல்வியைத் தொடர இடையூருக இருப்பவை எல்லாம் உடைத்தெறிவோம். எந்தச் சந்தர்ப்பத்திலும்சரி மாணவர்களின் கல்வியை சீர்குலைக்க ஏதாவது ஒரு சக்தி முனையுமாயின் அச்சக்திக்கு எதிராக நடவடிக்கைஎடுக்கத் தயங்க மாட்டோம்.''

ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர் திரு. எஸ். சுந்த

(5ம் பக்கம் பார்க்க)

# இந்தியா மீது அமெரிக்கா வர்த்தகத் தடை விதிக்காது

(வாஷிங்டன்)

இந்தியா மீது வர்த்தக தடைகளைக் கொண்டு வருவதில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்தியாவில் அமெரிக்கா முதலீடுகள் செய்வது தொடர்பாக இந்தியா நியாயமற்ற முறையில் கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளபோதிலும் வர்த்தகத் தடைகளை கொண்டு வருவதில்லை என்று அறிவித்துள்ளது.

# இளம் பெண் விபத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

இருபாலை டச்றேட்டில் இடம்பெற்ற லொறி–சைக்கிள் விபத்தொன்றில் இளம் பெண் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானர்.

கோண்டாவிலைச் சேர்ந்த வசந்தி வெங்கரட்ணம் (வயது 19) என்ற இளம்பெண்ணே இச்சம்பவத்தில் இறந்தவராவார். (56)

# இராசி பலன்

16 - 06 - 1990

சனிக்கிழமை

மேடம்:- சுகவாழ்வு, யோசனை தூரத்துச் செய்தி

இடபம்:- சுகம், குடும்பக் கலவரம், பிடிவாதம்

மிதுனம்:- தொழிற்சித்தி, நற்சிந்தனை செலவு.

கடகம்: அரசஉபாதை, பிடிவாதம் வாக்குச்சித்தி.

சிங்கம்: பொருட்செலவு, மந்தப்போக்கு, தெய்வ வழிபாடு.

கன்னி: கலகம்- ஆழ்ந்த சிந்தனை உறுதிநிலை.

துலாம்: அற்பர்நேசம் தேகபீடை வாகன சுகம்.

விருச்சிகம்: பிடிவாதம் தூரத்துச் செய்தி, பணக்கஷ்டம்.

தனுசு: உறுதிநிலை, தர்க்கம் செலவு.

மகரம்: தேகபீடை, நிதானம் வெற்றி.

கும்பம்: தொழில் மந்தம் செலவு, காரியக்கேடு.

மீனம்; உறுதி, மறதி தொழிற்சித்தி.

இ.மகாதேவா

# 3 குழந்தைகளை பெற்றெடுத்த பெண்

[ரியாத்]

சவூதியைச் சேர்ந்த 22 வயதுப்பெண் ஒருவர் மூன்று குழந்தைகளை அண்மையில் பெற்றெடுத்தார்.

முதலாவது குழந்தை பிறந்த எட்டு நாட்களுக்குப்பின் இரு குழந்தைகள் பிறந்ததாம்.

முதலாவதாகப் பெண் குழந்தையும் இரண்டாவதாக இரு ஆண் குழந்தைகளும் பிறந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மூன்று குழந்தைகளும் தாயாரும் ஆரோக்கியமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (து)

# சிந்துமாகாணராணுவத்திற்கு நீதித்துறை அதிகாரம் இல்லை

[கராச்சி]

பாகிஸ்தானில் கலகத்தினுல் பாதிக்கப்பட்டுள்ள சிந்து மாகாணத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் இராணுவத் துருப்புக்களிடம் நீதித்துறை அதிகாரம் எதுவும்வழங்கப்படவில்லை என்று பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

சட்டம், ஒழுங்கைப் பராமரிக்கத்தான் அங்கு இராணுவம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாதிகளையும், சமூக விரோதிகளையும் இராணுவத்தினர் கைதுசெய்வதற்கு அரசியற் சாசனம் அனுமதியளிக்கின்றது. ஆனுல் நீதித்துறை அதிகாரமெதுவும் இராணுவத்திற்கு வழங்கப்படவில்லை என்று சிந்து மாகாண அமைச்சர் ஒருவர் கூறினுர். (து)

# பாக்கு நீரிணைப் பகுதியில் ரோந்து நடவடிக்கை

(சென்னை)

தமிழ்நாடு அரசு கேட்டுக்கொண்டபடி மத்திய அரசு பாக்கு நீரிணைக் கடற்பகுதியில் கண்காணிப்பு மேற்கொள்ள கப்பல் படைகளுக்கு உத்தரவு வழங்கப்படவில்லை என்று வைஸ் அட்மிரல் என். ரி. சோப்ரா தெரிவித்துள்ளார்.

இன்னும்சில நாட்களில் இப்பகுதியின் ரோந்து நடவடிக்கைக்கு மத்திய அரசு முயற்சியெடுக்கும் என்றும் அவர் கூறினுர்.

# சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நயினுதீவு நாகபூஷணி அம்பாள் மகா சங்காபிஷேகம் நாளை ஞாயிறு காலை நடைபெறவுள்ளது.

## திருச்சிராப்பள்ளியில்

# 15 இலங்கைத் தமிழர்கள் பொலிஸாரினுல் கைது!

[சென்னை]

திருச்சிராப்பள்ளியில் திருவானைக் கோயிலிலுள்ள ஒரு வீட்டில் 15 இலங்கைத் தமிழ் இளைஞர்கள் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டனர்.

தகுந்த பாஸ்போர்ட் இல்லாமல் இந்தியாவுக்குள் நுழைந்தமையாலேயே அவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

14 வயதிலிருந்து 20 வயது வரையுடைய இந்த இளைஞர்கள் தங்கியிருந்த வீடு தற்பொழுது ஆயுதம் தாங்கிய பொலிஸாரினுல் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இந்த இளைஞர்கள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## சர்வகட்சி மகாநாடு:

# நிரந்தர மனித உரிமைகள் ஆணைக்குழு நியமிக்க முடிவு

(கொழும்பு)

சர்வகட்சி மாநாட்டின் பிரதிநிதிகள் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் ஜனுதிபதி திரு. ஆர். பிரேமதாசா தலைமையில் ஜனுதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

நிரந்தர மனித உரிமைகள் ஆணைக்குழுவை நிறுவுவது காண ஆலோசனை குறித்து ஆராயப்பட்டது. சிபார்சுகளைச் சமர்ப்பிக்க விசேடகுழு நியமிக்கப்பட்டது.

நீதியமைச்சர் ஜனுப் ஏ. ஸி. எஸ். ஹமீத் லிபரல் கட்சியைச் சேர்ந்த கலாநிதி சாரக அமரதுங்கா, சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசைச் சேர்ந்த ராம் ஹுஸிம் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த கலாநிதி நீலன் திருச்செல்வம், தமிழ்க் காங்கிரசைச் சேர்ந்த திரு. குமார் பொன்னம்பலம், ரெலோ இயக்கத்தைச்சேர்ந்த எஸ். சிறீகாந்தா என்போர் இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவார்கள்.

இப்பிரதிநிதிகள் கூட்டம் தொடர்ந்து நேற்றும் நடைபெற்றது. (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

''ஒழுங்கு முறையின் சாரம் அஹிம்சை. எனவே அஹிம்சா மார்க்கமே ஒருவனை தூய்மையான மக்களாட்சிக்கு அழைத்துச் செல்லும்''
— மகாத்மாகாந்தி.

# தமிழர்கள் மீது அம்பாறை மாதிரிக்கிராமத்தில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
அம்பாறை மாவட்டத்திலுள்ள 'டி. சி. சி.' மாதிரிக் கிராமத்திலிருந்து 175 தமிழ் குடும்பங்கள் இராணுவத்தாலும் சிங்கள மக்களாலும் வெட்டித் தாக்கப்பட்டனர். பலர் உயிரிழந்தாகத் தெரிவிக்கப்பட்டது. (153)

# கிண்ணியா முஸ்லிம்களின் வீடுகள் சேதம்!

(யாழ்ப்பாணம்)
கிண்ணியாவில் கடற்படையினர் பீரங்கிப் படகினல் தாக்குதல்கள் மேற்கொண்டனர். இதனல் கிண்ணியாவில் முஸ்லிம் மக்களின் வீடுகள் பெருமளவில் சேதமடைந்ததாகவும், முஸ்லிம் மக்கள் காயம் அடைந்ததாகவும்தெரிவிக்கப்பட்டது. (143)

## நமது நோக்கு

### கிழக்கின் கண்ணீர்...!

மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளில் அப்பாவிப் பொதுமக்கள் பலர் உயிரிழந்ததாகச் செய்திகள் வந்துள்ளன.

ஹெலித் தாக்குதல்களாலும் ஷெல் அடிகளாலும், பொதுமக்கள் பலர் இறந்துள்ளமை வேதனைக்குரியது.

ஏற்கனவே, சில ஆண்டுகளாக அப்பகுதி மக்கள் உயிரிழப்புக்கள், உடமை இழப்புக்கள் ஆகியவற்ருல் பெருந் தொல்லைக்குள்ளானுர்கள்.

அவர்கள் அகதிகளாகத் தங்கியுள்ள இடங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தவேண்டும்,

அவர்களது உணவு, உடைபோன்ற சில அடிப்படை வசதிகளைப் பொதுமக்கள் முன்வந்து உதவ வேண்டும்.

இதேவேளை, இத்தகைய அனர்த்தங்கள் ஏற்பட்டதற்கான காரணங்களை அரசு கண்டறிய வேண்டும்.

வெறும் வாதங்களை முன்வைத்துக்கொண்டிருக்காது, அறிக்கைகளை வெளியிட்டுக்கொண்டிருக்காது, இச் சம்பவம் ஆரம்பமானதற்கான அடிப்படைக் காரணங்களை உடனடியாக ஆராய்ந்து அறியவேண்டும்.

இனப் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்கவேண்டுமென்ற ஆவலில், ஜனதிபதி தொடக்கிவைத்த கலந்துரையாடல், திடீர்ச் சம்பவங்களாற் குலைந்துபோகக் கூடாது.

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையோடு, பிரச்சனைகள் அணுகப்படவேண்டும்.

எல்லோரும் இந்நாட்டுக் குடிமக்கள்தான் என்பதை பெருமையோடு சொல்லிக்கொண்டிருந்தவர் ஜனதிபதி.

தமது செயல்கள் மூலம் இதனை உறுதிசெய்ய ஜனதிபதி செயற்படவேண்டும்.

ஒருபகுதி மக்கள் மீது ஹெலித் தாக்குதல்களும், குண்டு வீச்சுத் தாக்குதல்களும் நடாத்தப்படவேண்டிய துர்ப்பாக்கிய நிலையைத் தவிர்க்க சகல நடவடிக்கைகளையும் இந்த நேரத்தில் எடுக்கத் தவறினல், மக்கள் வைத்திருந்த சிறிய நம்பிக்கையும் இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

''முறைசெய்து காப்பாற்றும் மன்னவனைத்'' தான் மக்கள் நம்புவார்கள். வாய்ப்பேச்சில் ஒன்றும், செயலில் வேறுவிதமாகவும் நடந்து, மக்களுக்கு துன்பம் ஏற்படுவதை எக்காரணம்கொண்டும் எவரும் விரும்ப மாட்டார்கள்.

# ''பாடசாலையின் வளர்ச்சிக்கு அதிபர் முக்கியமானவர்''

## - கல்விப்பணிப்பாளர்

(நாவற்குழி)
''ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு அதிபர்தான் முக்கியம். அதிபரின் ஆளுகையில்தான் பாடசாலை தங்கியுள்ளது. ஒரு பாடபாலையில் நல்ல அதிபர் இருந்தால்தான் பாடசாலையும் வளரும். அந்தஊரும் கல்வியில் சிறக்கும்''

இவ்வாறு வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தென்மராட்சி அதிபர் சங்கத்தினுல் வெளியிடப்பட்ட 'யுக்தி' சஞ்சிகையை வெளியீட்டு வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அதிபர்கள் சங்கத் தலைவர் திரு. க. சிவபாதசுந்தரம் தலைமையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்வெளியீட்டு விழாவில் திரு. சுந்தரலிங்கம் தொடர்ந்து பேசுகையில்; ''மனைவியிடம்கூடச் சொல்லக்கூடாத ஒரு உண்மையை தன்னிடம் உதவி ஆசிரியர்கள் சொல்லக்கூடிய அளவிற்கு அதிபர் ஆசிரியர்களுடன் அன்பாக இருக்கவேண்டும். மாருக ஆசிரியர்களில் ஐயம்கொண்டு சின்னவிடயத்தைக்கூடப் பெரிதாக்கி நடந்துகொண்டால் அந்த அதிபரினுல் பாடசாலையை வளர்க்கமுடியாது. அதிபர்கள் ஆசிரியர்களை வகுப்பிற்கு அனுப்பும் போது ஆளுமை மிக்கவர்களையும், ஆற்றல் மிக்கவர்களையும் அனுப்ப வேண்டும். முகத்திற்காக யாரையும் அனுப்பக்கூடாது. அதிபர்களும் நிர்வாக வேலையைப் பகிர்ந்தளித்து தாங்களும் வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபட வேண்டும். வகுப்பறைக்குச் செல்கின்ற ஆசிரியர்கள் அரைகுறையாக வகுப்பிற்கு செல்லாமல் முழுமையாகப் போகவேண்டும்'' என்ருர்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் திரு. க. சந்திரசேகரா பேசுகையில்; இன்று வெளியிடப்படும் இம்மலர் மிகவும் முக்கியமான தொன்ருகும். இம்மாதிரி நற்பணிகளை இந்த அதிபர் சங்கம் தொடர்ந்தும் செய்யவேண்டும். பத்து ஆண்டுகளுக்கொருமுறை கல்வி அறிவு இரட்டிப்பாகிறது. ஆகையால் கற்பித்தலுக்கு நாம் புதிய யுத்திகளையும் நுட்பங்களையும்பயன்படுத்தவேண்டும்.

யாழ். இந்துக் கல்லூரி அதிபர். திரு. க. சி. குகதாசன் பேசுகையில்; அதிபர் என்பதிலும் தலைமை ஆசிரியர் என்பதே பொருத்தமானதாகும். காரணம், ஆசிரியர்களுக்கெல்லாம் தலைமை தாங்குகின்றபடியால் தலைமை ஆசிரியர் என்பதே பொருந்தும். அதிபர் என்பது ஒரு அட்டகாசமான சொல். தென்மராட்சியிலிருந்து மாணவர்கள் யார்ழ்ப்பாணம் போகாத அளவிற்கு இபபகுதியில் கற்பித்தல் இடம்பெறவேண்டும்.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு. எஸ். நல்லையா இந் நூல்பற்றிய தனது ஆய்வுரையில் 'யுக்தி' என்பது வடமொழிச்சொல் எனவும் அதை 'உத்தி' என மாற்ற வேண்டுமெனவும், சஞ்சிகையின் பெயருக்கு முன்மட்டையில் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டினுர். மேலும் அவர் தனது ஆய்வுரையில் கல்வியென்பது இயல்பாக அமைய வேண்டும், மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். மாணவர்கள் பொது அறி

(5ம் பக்கம் பார்க்க)

## நிர்வாகக் குழு புகார்

(நாவற்குழி)
சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் சங்கத்தானைக்கிளை முகாமையாளரை இடமாற்றம் செய்யும்படி கோரும்மகஜர் ஒன்றுகிளையின் நிர்வாகக் குழுவினுல் சங்கத்தின்பொது முகாமையாளரிடம்கையளிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது கிளை முகாமையாளர் மது பாவிப்பதால் பொதுமக்களுடன் வெறுப்பு நடந்து கொள்வதாகவும், பாவனையாளர்களை தகாத வார்த்தைகளால் பேசுகிருர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இச்சங்கக்கிளை 12ம் திகதியும், 13ந்திகதியும் திறக்கப்படாததால் பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். (107)

## இடமாற்றம்

(வடமராட்சி)
பருத்தித்துறை மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலையின் வைத்திய அதிகாரி இடம்மாற்றம் பெறவுள்ளார்.

வைத்தியசாலையின் பிரதம அதிகாரியாக சேவை புரியும் டாக்டர் திரு எஸ். கதிரவேற்பிள்ளை தெல்லிப்பளை அரசினர் ஆதாரவைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுள்ளர். (51)

## பலதும் பத்தும்

### அடிக்குமா யோகம் நெடுந்தீவுக்கு,...?

கலிபோர்னியாவிலுள்ள எஸ். சரவணபவன் பத்திரிகை ஒன்றுக்குக் கடிதம் எழுதியுள்ளார். எமது நாட்டின் வரண்ட பிரதேசத்தில், குறிப்பாக, நெடுந்தீவில், பேரீந்து நன்ருக வளரக்கூடுமென எழுதியுள்ளார்.

கலிபோர்னியாவின் வரண்ட பகுதியில், பேரீந்தை உண்டாக்கி, உற்பத்தியைப் பெருக்கி வருகிருர்களாம்.

பனை மரம் வளரக்கூடிய இடங்களில் பேரீந்து நன்ருக வளரும். ஏன் இங்கும் அதனை வளர்த்துப் பயன் பெற முடியாது...?

உவர் நிலத்திலும் அது நன்ருக வளரும். அதிலிருந்து பழம், சுவையான கள், மிருக உணவு, எரிபொருள், கட்டடத்துக்குத் தேவையான பொருட்கள் கிடைக்கும்: நிழலும் கிடைத்து மண்ணும் குளிரும்.

மரம் நட்ட நான்கு வருடங்களிற் பூத்துக் காய்க்கும். ஒரு பிரச்சனை...! மரம் பூத்தபின்தான் தெரியுமாம் ஆணு, பெண்ணு என்று...!

இதற்கும் வழியுண்டாம்...! பெண்மரத்தின் அடியில் முளைத்த கன்றுகளைப் பெயர்த்துக்கொண்டு வந்து நடலாம்.

சவுதி அரேபியா, ஓமான் பேரன்ற மத்தியகிழக்கு நாடுகளிலிருந்து லீவில் வருவோர் கன்றுகளைக்கொண்டு வந்து ஆரம்பிக்கலாமல்லவா?

ஒரு மரம் எவ்வளவு காலத்திற்கு பயன்தரும்...? நூறு வருடங்களுக்கு நின்று பழம் தரும்; ஆனுல்... அது நூறு அடிக்கும் வளர்ந்துவிடும்...!

வாணி

## பெருமைக்குரிய விடயம்

அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய கிராமங்களில் பனைமரம் தறித்தல், மணல் ஏற்றுதல், சிற்பி அரித்தல் போன்ற செயல்கள் முற்ருகத் தடைசெய்யப்பட்டுள்ளன.

காலத்துக்குக் காலம் முதியோர்களால் நாட்டி வளர்த்த பனைமரங்களை நாளுக்குநாள் தறிக்கிருர்களே தவிர தறிப்பவர்கள் எவராவது புதிதாக

## மக்கள் கருத்து

விதைகளை நாட்டுவதில்லை. இச் செயல் விடுதலைப் புலிகளால் முற்ருகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவசிய தேவை ஏற்பட்டால் மாத்திரம் சிற்றூர் அவையின் சிபார்சின் மேல் அவர்களிடம் அனுமதி பெறப்படவேண்டும்.

மணல் எடுப்பதும் அவ்வாறே சென்ற பல ஆண்டுகளாக மணல் குடைந்து ஏற்றப்பட்டதினுல் பெருந்தொகையான நிலப்பரப்பு நீர் நிலை கொள்ளும் இடமாகவும், நன்னீர் உப்பு நீராகமாறும் தன்மையை உண்டாக்குவதாகவும் மக்களுக்கு எவ்வகையிலும் பிரயோசனமற்ற அதாள பாதளமாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது. இந்த செயலும் தடைசெய்யப்பட்டுள்ளது.

சிற்பி அரிப்பதும் மக்களைப் பெரும் பீதிக்குள்ளாகியது. கடல் நீர் உட்புகும் அபாயம், வயல் நிலம் பாதிப்பு, நன்னீர் உவர்நீராக மாறும் தன்மை, உயர்ந்த நிலப்பரப்பை கடல் கொள்ளும் அபாயம் ஆதியன வற்றிலிருந்து காப்பாற்றப்பட்டது பெருமைக்குரிய விடயமாக மதிக்கப்படுகிறது.

நா. சச்சிதானந்தன்.

## பொதுக்கூட்டமும் நூல் அறிமுகமும்

(யாழ்ப்பாணம்)
முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டமும் நூல் அறிமுகமும் இன்று சனிக்கிழமை பிற்பகல் நல்லைஞான சம்பந்தர் ஆதீனத்தில் ஆசிரியமணி திரு. அ. பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இங்கு 'தமிழ் மொழியும் யப்பானிய மொழியும் இலக்கண ஒப்புமை என்னும் நூல் அறிமுகப்படுத்தப்படும்.

அறிமுகவுரையை திரு. க. சொக்கலிங்கமும் (சொக்கன்) ஆய்வுரையை திரு. எஸ். சிவலிங்கராஜாவும் (விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) பதிலுரையை திருமதி மனேன்மணி சண்முகதாஸ் (ஆய்வாளர் கக்சயின் பல்கலைக்கழகம் யப்பான்) நிகழ்த்துவார்கள்.

# கடல் மார்க்கமாக பிறிமா மா கொழும்பு அனுப்பப்படுகிறது

(கொழும்பு)
திருமலை பிறிமா ஆலையிலிருந்து கடல் மார்க்கமாக மா [illegible] பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான அவசர ஏற்பாடுகளை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயம்
# சிறப்புடன் நடைபெற்ற மஹாகும்பாபிஷேகம்

[புலோலி]

சரித்திரப் பிரசித்திபெற்ற வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய ஸப்த (7) தள நூதன இராஜகோபுர பிரதிஷ்டையும், ஸ்ரீவிஷ்ணு சூத்திர பஞ்சஹம்சதி (25) குண்டமண்டல யாகசாலையும் அமைந்த புனராவர்த்தன சம்புரோஷண மஹா கும்பாபிஷேகம் கடந்த புதன்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது.

ஸப்த தள நூதன ராஜகோபுர பிரதிஷ்டா நவகுண்டபட்ச பிரதம குருவாக சிவாச்சாரிய திலகம் சிவஸ்ரீ ச.க. புருஷோத்தமக் குருக்களும், ஸ்ரீவிஷ்ணு சூத்திர பஞ்சஹம்சதிகுண்டபட்ச யாகசாலை மகாகும்பாபிஷேக பிரதமகுருவாக பிரதிஷ்டாசிரியாரத்ன சிவாச்சார்ய பூஷணம் சிவஸ்ரீ ச. கணபதிசாமி இராமச்சந்திரக் குருக்களும் பணியாற்றினார்கள்.

சுமார் 50 லட்சம்ரூபா செலவில் ஏழு தளங்களைக்கொண்டு 71 அடி உயரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த இராஜகோபுரத்தின் உச்சியில் ஏழுகலசங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த இராஜகோபுர வேலைகளை தமிழ்நாடு தேவகோட்டை ஸ்தபதி நா. சிவசிதம்பரம் சங்கநிதி, பதுமநிதி கட்டிடச் சிற்பவேலைகளை ஸ்தபதி கு. கந்தசாமியும் மேற்கொண்டு பூர்த்தியாக்கியுள்ளனர்.

மஹா கும்பாபிஷேகத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். விசேட போக்குவரத்துச் சேவைகளும் செய்யப்பட்டிருந்தன.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி சாரணர்கள் ஆலய வளவில் ஒழுங்கினைப் பேணும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை முழுநாளும் இடம்பெற்ற எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவத்திலும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் பணியில் ஈடுபட்டனர்.

இக்கும்பாபிஷேகத்தை யடுத்து அடுத்தமாதம் 27ம் திகதி வரை மண்டலாபிஷேகம் நடைபெறும்.

இக்கும்பாபிஷேகத்தில் நல்லை ஆதீனம் பரமசாரிய சுவாமிகள், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி கோபாலகிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றினார்கள். (61)

---

## ஆலயபரிபாலன சபை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு அத்தித்தோட்டம் பரமேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபை அங்குரார்ப்பணக்கூட்டம் ஆலய முன்றலில் திரு. வே. க. செல்வவிநாயகம் தலைமையில் நடைபெற்றது.

ஆலய பரிபால சபையின் காப்பாளர்களாக சு. இராசேந்திரக்குருக்கள், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரும் தலைவராக திரு. வே. க. செல்வவிநாயகமும் துணைத்தலைவராக திரு. எம். கே. இளையப்புவும் பொதுச்செயலாளராக திரு. க. இ. தருமலிங்கமும் துணைச்செயலாளராக திரு. ந. க. கோபாலரத்தினமும் பொருளாளராக திரு. க. வே. நாகேந்திரமும் நிர்வாக அங்கத்தினர்களாக நா. வே. தேவராசா, நா.பூ. நாகராசா, க. இ. கோபாலசிங்கம், வே. க. சிவகுமார் க. சி. இராசரத்தினம், நா. வே. தம்பியப்பா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

---

## பாடசாலையின்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வைப் பெறக்கூடியதாக பாடசாலைகளில் நூல் நிலையம் அமைய வேண்டும். கல்வி வளர்ச்சிக்கு பிரதேசம் ஒரு முக்கிய காரணியல்ல ஆசிரியர்கள் நினைத்தால் எந்தப் பிரதேசத்திலும் கல்வியை வளர்க்க முடியும்.

இறுதியில் அதிபர் சங்கச் செயலாளர் திரு.இ.கணேசன் நன்றியுரை வழங்கினார். (107)

---

## மாணவரின்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ரேஸ்வரன் பேசுகையில் ''மாணவர்களுக்கு ஆங்கில பாடம் மிகவும் அவசியமானதாகும். ஆகையால் மாணவர்கள் ஆங்கில பாடத்தில் கூடுதல் கவனம் எடுக்க வேண்டும். இன்று நடந்த ஆங்கில நிகழ்ச்சிகளைப் பார்வையிடும்போது முன்பிலும் பார்க்க முன்னேற்றம் தெரிகிறது நான் அடுத்த ஆண்டு வரும்போது இன்று நல்ல முன்னேற்றம் ஆங்கிலத்தில் காணம்படவேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டார்.

மாணவர்களால் நடாத்தப்பட்ட ஆங்கில நிகழ்ச்சிகளின் பேச்சு, பாட்டு, சம்பாஷணை பேன்ற நிகழ்ச்சிகளை வித்தியாலய ஆங்கில ஆசிரியர் திரு. கே. சுப்பிரமணிய ஐயர் நெறிப்படுத்தி நடாத்தினர். ஆசிரியர் எஸ்.சதாசிவம் நன்றியுரை நல்கினர். (107)

---

## யாழ்ப்பாணத்தில்
# இனம்புரியாத பதற்றம்!
## உணவுப் பொருள்களை வாங்குவதில் மக்கள் கூடுதல் ஆர்வம்

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரில் நேற்று இனந்தெரியாத பதற்றம் நிலவியது. வழக்கம்போலஎல்லாக்கடைகளும் திறக்கப்படவில்லை. வாகனப் போக்குவரத்து மிகவும் குறைவாகவே காணப்பட்டது.

நேற்றுக்காலை ஏழுமணிக்கு தேநீர்க்கடைகள் உட்பட எந்தக்கடைகளும் திறக்கப்படவில்லை. தேனீர்க்கடைகள் சில ஒற்றைக்கதவில் திறந்திருந்தபோதிலும் வியாபாரம் நடைபெறவில்லை.

### நடைபாதை வியாபாரிகள்

நகரத்தில் உள்ள கண்டி, மாத்தளை பகுதிகளைச் சேர்ந்த நடைபாதை முஸ்லிம் வியாபாரிகள், நேற்றுக்காலை தங்கள் சொந்த இடங்களுக்கு செல்வதற்காக பஸ் நிலையம் வந்திருந்தனர்.

### ஒரே ஒரு பஸ்

கேரதீவு ஊடாக ஒரேஒரு பஸ் மட்டும் காலை 7 மணியளவில் மன்னாருக்குப் புறப்பட்டது. அந்தபஸ்ஸில் அந்த முஸ்லிம் வியாபாரிகள் யாவரும் சென்றனர். யாழ் நகரில் தங்கியிருந்து தனியார் கல்லூரிகளில் கல்வி பயின்றுவந்த வெளியூர் மாணவர்களும் அந்தப் பஸ்ஸில் புறப்பட்டனர்.

கொடிகாமத்திற்கு மட்டும் நேற்றுக்காலை 6 மணிக்கு ஒரு பஸ் புறப்பட்டது. பிரயாணிகள் மிகக் குறைவாகக் காணப்பட்டனர்.

மினிபஸ் சாவகச்சேரி மட்டுமே சேவையை நடத்தியது,

### கட்டணம் அதிகரிப்பு

மினிபஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தது. வழக்கமாக யாழ். - சாவகச்சேரிக்கு கட்டணம் 4 ரூபாவாகும். நேற்று இது 5 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருந்தது.

சாவகச்சேரி - கொடிகாமம் தட்டிவான் கட்டணமும் நேற்றுமுதல் 50 சதத்தினல் அதிகரிக்கப்பட்டிருந்தது. சாவகச்சேரியிலிருந்து பளைவரை தனியார் வான் சேவையும் நடைபெற்றது. பளைக்கு அப்பால் வ. பி. போ. ச. சேவை எதுவும் நடைபெறவில்லை.

### கறுப்புக்கொடி

சாவகச்சேரி, கொடிகாமம் பகுதியில் கடைகள் வாகனங்களில் கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. கிளிநொச்சியில் வீரமரணமடைந்த புலிப் போராளிகளுக்கு அஞ்சலி செலுத்து முகமாக கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டன.

### எரிபொருள் தட்டுப்பாடு

சாவகச்சேரி, கொடிகாமத்திலும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. கொடிகாமம் ப. நோ. கூ. சங்க கிளைகளில் மக்கள் கொள்கலன்களுடன மண்ணெண்ணை வாங்குவதற்கு காத்திருந்தனர்.

### தேங்காய் விலை சரிவு

கொடிகாமம் சந்தைக்கு வழக்கம்போல் வியாபாரிகள் வராததினல் தேங்காய்விலை சரிந்திருந்தது. தேங்காய் 2 ரூபா முதல் 3 ரூபா வரை நேற்று விற்பனை செய்யப்பட்டது இதேசமயம் மாம்பழத்தின்விலை அதிகரித்திருந்தது. கறுத்த கொழும்பு மாம்பழம் ஒன்று 16 ரூபா வரை விலை போனது. மரக்கறிவிலை குறைவாகக் காணப்பட்டது. எலுமிச்சம்பழம் 2 ரூபா முதல் 3 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டன.

### பொருட்கள் வாங்க

மக்கள் எங்கு பார்த்தாலும் உணவுப் பொருள்களை வாங்கி சேமிப்பதில் ஈடுபட்டிருந்தனர். அரிசி மா, பருப்பு. தேயிலை, சீனி போன்றவற்றை அதிகளவில் வாங்கிச் சென்றனர்.

### யாழ் நகரில்

நேற்றுமுன்தினம் யாழ். நகரில் உள்ள கடைகளிலும் மக்கள், உணவுப்பொருள்களை அதிகளவில் வாங்கிச் சென்றனர்.

சில பொருள்களுக்கு தட்டுப்பாடும் காணப்பட்டது. மா, சீனி போன்ற பொருள்களுக்கு சில கடைகளில் விலை அதிகரிக்கப்பட்டிருந்தது.

### மண்ணெண்ணைக்கு அலைந்தனர்

யாழ் நகரில் எந்த வீதியைப் பார்த்தாலும் மக்கள் கொள்கலன், போத்தல்களுடன் மண்ணெண்ணைக்காக அலைந்து கொண்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதியில், நேற்று நோயாளிகள் மிகக் குறைவாகக் காணப்பட்டனர். யாழ். நகர பாடசாலைகளில் மாணவர்கள் பதற்றநிலை காரணமாக முன்கூட்டியே வீடுசென்றனர்.

யாழ். நகரிலுள்ள தனியார் கல்விநிலையங்களில் பிற்பகலில் மாணவர்கள் வருகை குறைவாகக் காணப்பட்டது.

### வீடுகளில் பதுங்குகுழி

யாழ். நகரிலுள்ள வீடுகளில் நேற்று முதல் பதுங்கு குழிகள் வெட்டுவதிலும் மக்கள் ஈடுபட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

தீப்பெட்டி, மெழுகுவர்த்தி விலைகளும் அதிகரிக்கப்பட்டிருந்தன. சகல கடைகளிலும் எல்லாப் பொருட்களினது விலைகளும் அதிகரித்திருந்தன.

நேற்று முன்தினம் பதற்ற

(7-ம் பக்கம் பார்க்க)

---

## ஜவுளி வகைகள், எவர்சில்வர் பாத்திரங்களுடன்
# கடத்தல் படகு கைப்பற்றப்பட்டது!
## 2 இந்தியர்மீது விசாரணை

[யாழ்ப்பாணம்]

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு உள்ளிணைப்பு இயந்திரம் பூட்டியமரப் படகில் சட்டவிரோதமாக கடத்தி வரப்பட்ட பத்துப் பொதிகள் அடங்கிய ஜவுளி வகைகள் தலைகுடிகள், எவர்சில்வர் பாத்திரங்கள் கச்சதீவு கடல் பகுதியில் வடபிராந்திய கடற்படை ரோந்துப் பிரிவினரால் கைப்பட்டன.

கடத்தல் படகில் வந்தவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

காங்கேசன்துறை சுங்கப் பகுதி விசேட தடுப்பு பிரிவினரிடம் கடத்தல் பொருள்களுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் பின்னர் ஒப்படைக்கப்பட்டனர்.

சுங்கப்பகுதியினரின் விசாரணையின் பின்னர் கடத்தல் பொருள்களும் மரப்படகும் பறிமுதல் செய்யப்பட்டன.

படகுகளில் இந்தியாவைச் சேர்ந்த இராமநாதபுரம் மாவட்டம் கனகசாமி முனியசாமி, கணபதி செல்வம் ஆகியோரும்வேலணையைச் சேர்ந்த சண்முகம் அரியரத்தினமும் இருந்தனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது,

வேலணையைச் சேர்ந்தவர் மீது குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்தியர் இருவரும் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

அதேவேளை இலங்கை குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் இருவரும் காங்கேசன் துறையில் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். [153]

---

# "கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை தரம் உயர வேண்டும்"

[கிளிநொச்சி]

"கிளிநொச்சி மாவட்ட அரசினர் வைத்தியசாலை பல வழிகளிலும் முன்னேற்றம் கண்டு, விரைவில் ஆதார வைத்தியசாலையாக தரமுயர வேண்டும்'' என்று விடுதலைப் புலிகளின் முன்னணி மாவட்ட அரசதிணைக்கள இணைப்பாளர் திரு.எம். ஜி. சிவபாதம் பிரஸ்தாப வைத்தியசாலை நோயாளர்நலன்புரிச்சங்க அங்குரார்ப்பணக்கூட்டத்தில் பிரதம பேச்சாளராககலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் என். சத்தியசீலன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. புலிகளின் மாவட்ட அரச திணைக்கள இணைப்பாளர் திரு. சிவபாதம் மேலும் பேசுகையில், ''பல வழிகளிலும் கிளிநொச்சி மாவட்டம் முன்னேற்றம் காணவேண்டும். இந்த வைத்தியசாலை அபிவிருத்தியில் இன்று போதியளவு முன்னேற்றம் காணவில்லை. [illegible] கள் இங்கு நிறைவேற்றப்பட வேண்டும். டாக்டர்கள், தாதிமார், ஊழியர்கள் பற்றுக் குறையும் இங்கு நிலவுகிறது. பொதுமக்கள், ஆஸ்பத்திரி அபிவிருத்தியில் போதிய அக்கறை காட்டவேண்டும். ஏற்கனவே பொதுமக்கள், வைத்தியசாலையின் அபிவிருத்தி கருதி சுற்றுமதில் முதலானவற்றை அமைத்துள்ளனர். இது வரவேற்கத்தக்கது'' என்றார்.

நோயாளர் நலன்புரிச்சங்க புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாக தெரிவானார்கள். தலைவர் டாக்டர் என். சத்தியசீலன் உபதலைவர் சி. இராசகுலம் செயலாளர் டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி, உபசெயலா திரு. மகேஸ்வரன் பொருளாளர் இ. குணரெத்தினம் நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவானார்கள். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாவட்ட சுகாதார பொறுப்பாளர் திரு. விஜயராசா நன்றியுரையாற்றினர். [83]

---

## தமிழில் பெயர்பலகைகள்

(யாழ்ப்பாணம்)

வேலணை, வங்காளவடி கூட்டுறவுப் பலநோக்கச்சங்கத்தில் உள்ள மக்கள் கடை, கிராமிய வங்கி ஆகியவற்றில் தமிழில் வாசகங்கள் பெரிய எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. காவலூரில் சில வர்த்தக நிலையங்களில் தமிழில் பெயர்ப்பலகைகள் காணப்படுகின்றன.

---

## சுற்றுடல் பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

காவலூர் நவீன சந்தைக் கட்டிடப் பகுதியின் பின் பக்கம் அமைந்துள்ள மலசலகூடங்கள் இன்னும் பூர்த்தியடையாமல் இருப்பதால் சந்தைச் சுற்றுடல் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

---

## வருடாந்த பொதுக்கூட்டம்

(அச்சுவேலி)

அச்சுவேலி புனிததிரேசாள் மகளிர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சபை வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 24ம் திகதி நடைபெறும்.

கல்லூரி அதிபர் அருட் சகோதரி எம். எத்தல்வீவா தலைமையில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில் புதுவருட நிர்வாகிகள் தெரிவு ஓய்வுபெற்ற அதிபர் அருட் சகோதரி மேரி கலீஸ்ரா பிரிவுபசார வைபவம் என்பன நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'முகாம்களுக்குள் ராணுவம்இனிமேல் முடங்கிக்கிடக்காது

## முகாம்கள் பலப்படுத்தப்படும் என்கிறார் ரஞ்சன்

(கொழும்பு)

இராணுவத்தினர் முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்க மாட்டார்கள். சகல பகுதிகளிலுமுள்ள இராணுவமுகாம்கள் பலப்படுத்தப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் திரு.ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலே அவர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் ரஞ்சன் மேலும் இம்மாநாட்டில் கூறியதாவது;

''வடக்கிலும் கிழக்கிலும் விடுதலைப்புலிகளுக்கும், அரசபடைகளுக்கும் இடையே கடும் சண்டை நடந்துகொண்டிருக்கிறது. 650 பொலிசாரைக் காணவில்லை. இவர்கள் விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம்.

### உயிரிழப்பு சேதம்

''அரச, விடுதலைப் புலிகள், பொதுமக்கள் உயிரிழப்புகள், சேதங்கள் குறித்து உத்தியோகபூர்வமான தகவல்கள் எதனையும் வெளியிட முடியாது.

''சகல இராணுவ முகாம்களும், திருகோணமலையும் பாதிக்கப்படவில்லை. எமது பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து முகாம்களில்தங்கியிருக்கவில்லை.

''விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள எமது பொலிஸ் நிலையங்கள் திருப்பி எம்மிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றால், அவற்றை நாம் பலாத்காரமாக மீட்டு எடுப்போம்.

''தற்போது நடைபெற்றுக் கொண்டிருப்பது விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான யுத்தமாகும்.

### தமிழருக்கு பாதுகாப்பு

''சகல சிங்களமக்களும் தத்தமது பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டும்.

மக்கள் மிகவும் தீவிர கவனமும், கட்டுப்பாட்டுடனும் நடந்துகொள்ள வேண்டிய நேரம் இது! தேவையற்ற முறையில் சிங்கள மக்கள்குழப்பம் அடையவேண்டாம். உங்கள் சிந்திக்கும் திறனைப் பயன்படுத்தி உணர்ச்சிமிறல்களுக்கு இடமளிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

தற்போதைய நிலைமைக்குத் தமிழ் மக்கள் எந்தவகையிலும் பொறுப்பானவர்கள் அல்ல: ஆகவே அப்பாவி மக்களுக்கு தீங்கு ஏற்படாமல் இருப்பது உறுதிப்படுத்தப் படவேண்டும்.

### இராணுவ ரீதியாகவும் தீர்வு

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உருவாகியுள்ள இன்றைய நிலைமைகளை பேச்சுவார்த்தை மூலமும், இராணுவ ரீதியாகவும் நாம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவோம்.

''இந்த நிலைமைக்கான முழுப் பொறுப்பையும் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் பொறுப்பேற்கவேண்டும். இவ்வாறு நடந்துகொள்ளும் அதன் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.''

### இரத்தம் சிந்தத் தயாரில்லை

''இப்பிரச்சனைகளை மோதல்கள் இன்றித் தீர்ப்பதற்கு ஜனாதிபதி இயன்றளவு வளைந்து கொடுப்பதைச் சகலரும் அறிவார்கள்.

''வேண்டுமென்று நாங்கள் இரத்தம் சிந்த விரும்பவில்லை. எனினும் எமது பிரஜைகள் சகலரையும் நாம் பாதுகாக்க வேண்டும். தவறாக வழிநடாத்தப்பட்டு ஆயுதம் ஏந்தியிருக்கும் சகலரையும், மேலும் உயிரிழப்புகள் நிகழாவண்ணம் சரியான பாதையில் வழிநடாத்தப்பட வேண்டும்'' என்றார்.

### 6-வது ஷரத்து முடிவில்லை

''எமது கொள்கையில் எந்தவித மாற்றமும் இல்லை. அரசியல் அமைப்புச் சட்டத்துக்கான திருத்தங்கள், மாகாண சபைகள் சட்டமூலம் என்பன தொடர்பாக அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மாற்றப்படமாட்டாது. 6-வது திருத்தச் சட்டம் தொடர்பாக இதுவரை எத்தகைய தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

### விடுதலைப் புலிகள் பகைவர்கள் இல்லை

''விடுதலைப் புலிகள் எமது பகைவர்களாக இருக்கவில்லை. அவர்கள் இந்திய அமைதிப் படையினரின் பகைவர்களாக இருந்தனர். காலத்துக்குக்காலம் அவர்கள் எங்களுடைய அழைப்புக்குச் செவிமடுத்தார்கள். அவர்களை நாம் எமது பகைவர்களாகக் கருதவில்லை.

''ஐக்கிய இலங்கையை உருவாக்க நாம் நேர்மையாக ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றோம். இதனை வெளி உலகத்துக்கு நிரூபித்துக் காட்டுவோம். ஆயுதம் ஏந்துபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தனி நபர்களே. ஆனால் நாமோ நாட்டின் எதிர்காலத்தைக் கவனத்தில் கொண்டு எமது கொள்கையை நோக்கிச் செயல்படவேண்டியவர்களாக இருக்கின்றோம்.''

## அந்தோனியார் ஆலய உற்சவம்

(யாழ்ப்பாணம்)

காவலூர் கிழக்கு புனித அந்தோனியார் ஆலய உற்சவம் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கூட்டுத் திருப்பலி புனித அந்தோனியார் திருச்சொரூபப்பவனி ஆகியவற்றுடன் முடிவுற்றது.

திருவிழா கூட்டுத் திருப்பலியை அருட்திரு. அன்ரன் ராஜநாயகம், அருட்திரு. ஜெயக்குமார், அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை, அருட்திரு சாபி கிருபானந்தன் ஆகியோர் நிறைவேற்றினர். சாட்டி மண்கும்பான் நாரந்தனை கரம்பன் ஆகிய இடங்களிலிருந்து ஏராளமான மக்கள் திருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## காயமடையும் ராணுவத்தினர் சிகிச்சைபெற மருத்துவ நிபுணர்கள் தேவை

(கொழும்பு)

தற்பொழுது நடைபெற்று வரும் சண்டையில் ஆயுதப் படையினருக்கு சிகிச்யையளிக்க சத்திர சிகிச்சை நிபுணர்கள், மயக்க மருந்து செலுத்தும் மருத்துவர்கள் ஆகியோரின் சேவை தேவைப்படுவதாக கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்குறிப்பிட்ட துறைகளில் மருத்துவர்களாகவும், நிபுணர்களாகவும் பணியாற்ற விரும்புவோரின் சேவை பெற்றுக்கொள்ளப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படும் வைத்தியர்கள் வெளி மாவட்டங்களில் கடமையாற்ற அனுப்பப்படுவார்கள்.

இவர்கள் ஒருவாரம் அல்லது இரண்டு வாரங்கள் சேவையாற்ற வேண்டியிருக்கும் என்றும் இது தொடர்பாக கொழும்பு இராணுவத் தலைமையகத்திலுள்ள மருத்துவப் பணிப்பாளரோடு தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளார்கள். (து)

## இந்திய மீன்பிடி வள்ளம் நெடுந்தீவில் விபத்தில் சிக்கியது!

(நெடுந்தீவு)

கடலில் எதிர்பாராது வீசிய தடும் காற்றினால் இழுத்துச் செல்லப்பட்ட பாய் மீன்பிடி வள்ளம் ஒன்று நெடுந்தீவு நோக்கி முனைக்கடற்கரையில் கடற்பாறையுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

தென் இந்தியா இராமேஸ்வரத்திற்கு மேற்கே அக்காமடப் பகுதியைச் சேர்ந்த 'ஆரோக்கியத் தாய்' எனப் பெயர்கொண்ட இந்தப் பாய் மீன்பிடி வள்ளத்தில் இருந்த எம். ஜெயக்குமார், எஸ். சேகர், கே. சிங்கராயர் ஆகிய மூவரும் காயங்களின்றி தப்பிக் கரை சேர்ந்துள்ளனர். (133)

## பவளவிழா நாளைய நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெறும் பவள விழாவில் நாளைய நிகழ்ச்சிகள் வருமாறு:

### நிகழ்ச்சிகள்

பிரதம விருந்தினர்; திரு. இரா. சுந்தரலிங்கம் (வட பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்), திருமதி தேவராணி சுந்தரலிங்கம்.

சிறப்பு விருந்தினர். திரு. தங்கராஜா (கல்வித்திணைக்களம்).

விஷேச விருந்தினர்: திரு. தனஞ்செயன், (உதவிக்கல்விப் பணிப்பாளர் சாவகச்சேரி), திரு.தியாகராஜா (உதவிக்கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்).

கௌரவ விருந்தினர் திரு. ஆர். கே. குலசேகரன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், மருதனாமடம்), திரு.கணேசபிள்ளை (கல்வி அதிகாரி, கோட்டக் கல்வி நிலையம். மருதனாமடம்) திரு. இரட்ணராஜா (கல்வி அதிகாரி, கோட்டக் கல்வி நிலையம், மருதனாமடம்), பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்கள் (விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை).

காலை 9-00மணி: வரவேற்பு, கோயில் பூசை, அதிபர் பட்டியல் திரைநீக்கம், உடற்பயிற்சி, கண்காட்சி ஆரம்பம், இசை, நடனம், மனையியல் வாழ்க்கைத் திறன், தையல், விவசாயம், அதிர்ஷ்ட விளைவு மற்றும் பல.

பிற்பகல் 2-30 மணி; தேவாரம், வரவேற்புரை, ஆசியுரை பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர், தலைமையுரை திருமதி எஸ். எஸ். குமாரசாமி, பரிசளிப்புப் பேருரை திரு. இரா. சுந்தரலிங்கம், பரிசில் வழங்கல் திருமதி தேவராணி சுந்தரலிங்கம், நன்றியுரை திரு. எஸ். இலகுநாதன், கலை நிகழ்ச்சிகள்.

## வீரவேங்கை தாமு ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

[அச்சுவேலி]

வீரவேங்கை தாமு (இரத்தினம்) ஞாபகார்த்தமாக புத்தூர் கிழக்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்திய விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்:

15 மைல் மரதன் ஓட்டப் போட்டி [ஆண்கள்] 1ம்இடம்: கே. சண்முகம் பிள்ளை [வேலணை], 2ம் இடம்: கே. உதயகுமார் [புன்னாலைக்கட்டுவன்], 3ம் இடம்: வி. சிவநேசன் [இயக்கச்சி].

50 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி [ஆண்கள்] 1ம் இடம் வி.கைலைநாதன் [அளவெட்டி] 2ம் இடம்: ஏ. துரைமணி [நாவாந்துறை] 3ம் இடம்: நா. துரைசிங்கம் [புத்தூர் கிழக்கு].

15 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி [பெண்கள்] 1ம்இடம் செல்வி ரி. சுஜீத்தா [பண்டத்தரிப்பு] 2ம் இடம்: செல்வி எம். தனவதி [நீர்வேலி] 3ம் இடம்: செல்வி என். றஞ்ஜினி [நவக்கிரி].

40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 7 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி 1ம் இடம்: எம். சின்னத்தம்பி [அளவெட்டி] 2ம் இடம்: எம். கனகலிங்கம் [சரசாலை] 3ம் இடம்: எம். பரமநாதன் [புத்தூர் மேற்கு].

25 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி புத்தூர் கிராம எல்லைக்குட்பட்டவர்களுக்கானது, 1ம் இடம்: பி. பார்த்தீபன் [நவக்கிரி] 2ம் இடம்: வி.சந்திரன் [நவக்கிரி] 3ம் இடம்: கே. மோகன் [புத்தூர்மேற்கு]

வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசில்களை வீரமரணம் அடைந்த தாமுவின் தந்தையாரும் சகோதரியும் வழங்கினார்கள். [74]

## புனர்வாழ்வு, புனரமைப்பு பொதுக் கூட்டம்

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராம சேவை அலுவலர்களுக்கும் எதிர்வரும் புதன் கிழமை (20-ம் திகதி) காலை யாழ். அரச செயலகத்தில் புனர்வாழ்வு, புனரமைப்புத் தொடர்பான கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்தக் கூட்டத்தில் புனர்வாழ்வு புனரமைப்பு நிவாரணம் மீளக் குடியமர்வு, சுய தொழில் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது. (137)

## கொத்தணி வீடமைப்பு திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டத்தில் அரச காணிகள் உள்ள இடங்களில் கொத்தணி வீடமைப்புத் திட்டம் வீடமைப்புத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள அரச காணிகளில் மாதம் ஒன்றுக்கு ரூ 700க்கு உட்பட்ட வருமானம் உடையவர்களுக்கு ''கொத்தணி வீடமைப்புத் திட்டத்தின்கீழ் ரூபா 15,000 பெறுமதியான வீடுகள், வீடமைப்புத் திணைக்களத்தினால் கட்டி நன்கொடையாக வழங்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மேலும் மாதமொன்றுக்கு வருமானமாக ரூபா 700க்கும், ரூபா 1500க்கும் இடைப்பட்டவர்களுக்கு 30.000 ரூபா பெறுமதியான வீடுகள் அரச காணிகளில் கட்டி வழங்கப்படவுள்ளன. இந்த 30,000 இல் ரூபா 15,000 நன்கொடையாகவும், மிகுதி 15,000 ரூபா 15 வருடங்களில் ஆறு வீத வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டிய கடனாகவும் வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொத்தணி வீடமைப்புத் திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்படும் குடும்பங்கள் ஒருங்கிணைந்த புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டத்தின்கீழ் வீடமைப்பு நன்கொடையோ, வீடமைப்புக் கடனோ பெறாதவர்களாக இருக்கவேண்டியது இங்கு குறிப்பிடத்தக்கது. (137)

## விளையாட்டுப் போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபை சன சனசமூக நிலைய சமாசம் தனது அங்கத்துவநிலையங்களுக்கிடையில் கரபந்தாட்டம், வலைபந்தாட்டம், உதைபந்தாட்டம், எறிபந்தாட்டம், தாச்சி மற்றும் மெய்வல்லுநர்ப் போட்டிகளையும் நடத்தவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேஜர் முரளி வெற்றிக்கேடயம் 3-வது சுற்றுப் போட்டி திங்கட்கிழமை நடைபெறும்

[நாவற்குழி]

மேஜர் முரளி ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான மூன்ருவது சுற்றுப் போட்டி எதிர்வரும் திங்கட்கிழமை காலை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மூன்ருவது சுற்றுக்காகப் பதினெட்டுப் பாடசாலைகள் தெரிவாகியுள்ளன. இரண்டாவது சுற்றின்போது அதிக புள்ளிகளைப் பெற்று வல்வை மகளிர் கல்லூரி (48) முன்னணியில் திகழ்கின்றது. இரண்டாவது சுற்றின்போது 18 புள்ளிகளைப் பெற்று தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவன் சி. ரகுராம் சாதனை நிலைநாட்டினுர்.

மூன்ருவது சுற்றுப் போட்டிக்காகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகள் வருமாறு:-

மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனுக் கல்லூரி, மல்லாகம் ம. வி. வல்வை மகளிர் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, கைதடி முத்துக்குமாரசுவாமி ம. வி., பளை ம. வி., உசன் இராமநாதன் ம. வி., உரும்பிராய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, நயினுதீவு ம. வி., கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, வீமன்காமம் ம. வி., பரியோவான் கல்லூரி, சன்மார்க்க வித்தியாலயம் என்பனவாகும். (107)

## மக்கள் சேவா சங்கம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மக்கள் சேவா சங்கம் மீண்டும் இருபிட்டி மக்கள் சேவா சங்கமாக அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் புதிய பெயர் மாற்றப்பட்டது.

இதன் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்; நா. தனபாலசிங்கம், க. திருநாவுக்கரசு தலைவர்: செ. ஏகாம்பரம், உப தலைவர்: ஐ. கணேசன், செயலாளர்: த. தவராசா. பொருளாளர்: கா. திருநாவுக்கரசு, உப செயலாளர்: க. தேவதாஸ். (101)

## மதுபானம் அளக்கும் கருவிகள் அளவை முத்திரையிடப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

சகல மதுபானக் கடைகளிலும், மது விற்பனை நிலையங்களிலும் உள்ள மதுபானம் அளக்கும் கருவிகள், நிறுவைகள் திணைக்களத்தினரால் பரிசோதிக்கப்பட்டு முத்திரை இடப்பட்டிருக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட அளவைகள், நிறுவைகள் திணைக்களப் பொறுப்பதிகாரி திரு. கா. நாகலிங்கம் அறிவித்துள்ளார்.

1976ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தேசிய மெட்ரிக் முறையாக்கும் சட்டத்தின் 20ம் பிரிவின்கீழ் மதுபான விற்பனை நிலையங்களின் அளவைக் கருவிகள் அமைந்திருக்க வேண்டும் என்றும், அளவை நிறுவைப் பரிசோதகரால் முத்திரை இடப்படாத அளக்கும் கருவிகளைப் பாவிப்பது தண்டனைக்குரிய குற்றம் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

முத்திரையிடப்பட்ட அளவைகள் மூலமே நுகர்வோர் பயன்பெற வேண்டுமென்றும், சட்டவிரோத அளவைகள் பயன்படுத்தப்படுகின்றதா என்பதை நுகர்வோர் அவதானித்துத் தமது கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றும் அளவைகள் நிறுவைகள் திணைக்களத்தினர் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்திலும். கிளிநொச்சி மாவட்டத்திலும் இதுவரையும் தமது அளவைகள் நிறுவைகள் கருவிகளுக்கு முத்திரை இடாதவர்கள் உடனடியாக 'முத்திரை' இட்டுக் கொள்ள வேண்டுமென்று கோரப்பட்டுள்ளனர். (54)

## உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டி கமரூன் - இத்தாலி கோஷ்டிகள் 2-வது சுற்றில் விளையாடத் தெரிவு

உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டியின் ஆரம்ப ஆட்டத்தில் தற்போதைய சாம்பியனுன ஆர்ஜன்ரீனுவை வெற்றி பெற்ற ஆபிரிக்க நாட்டுக் கோஷ்டியான கமரூன், மீண்டும் தமது 2-வது ஆட்டத்தில் வெற்றி பெற்று கால் இறுதி ஆட்டத்தில் விளையாடுவதற்கு தகுதி பெற்ற முதலாவதுநாடு என்ற பெருமையையும் தட்டிக்கொண்டது.

கமரூனுக்கும் - றுமேனியாவுக்குமிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கமரூன் வெற்றி பெற்றது:

உலக அரங்கில், பலம் வாய்ந்த கோஷ்டிகளில் ஒன்ருகக் கணிக்கப்பட்ட ரஷ்சியாவை, 2-0 கோல்களால் வெற்றிபெற்று உலக ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்திய ருமேனியாவை மேற்படி போட்டியில் கமரூன் தோல்வியடையச் செய்தது பாராட்டுக்குரிய செயலாகும் என வர்ணிக்கப்படுகின்றது.

இப்போட்டியில் கமரூன் — ருமேனியாவை 2—1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது:

நாளை மறுதினம் 18-ம் திகதி கமரூன் – ரஷ்யாவுடன் மோதுகின்றது. இப்போட்டியின் பெறுபேறுகள் எதுவிதமாக இருந்தாலும் கமரூன்கால் இறுதியாட்டத்தில் விளையாடத் தெரிவான நிலையை இது பாதிக்காது எனக்கூறப்படுகின்றது. உலகக் கிண்ணத்தை பந்தாட்டப் போட்டியில் ஆபிரிக்க நாடுஒன்று கால் இறுதியாட்டத்திற்கு விளையாடத் தகுதி பெற்றது இதுவே முதல்தடவையாகும்.

### இத்தாலி வெற்றி

உலக கிண்ணத்தை மூன்று தடவைகள் கைப்பற்றிய இத்தாலி மீண்டும் தனது 2-வது போட்டியில் வெற்றி பெற்று கால் இறுதியாட்டத்தில் விளையாடத் தெரிவாகியுள்ளது.

இத்தாலிக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் இத்தாலி 1—0 கோலால் வெற்றி பெற்றது:

நமது விளையாட்டு நிருபர் 'தேவா'

5 — 1 கோல்கள் வித்தியாசத்தால் அமெரிக்காவை வெற்றி பெற்ற செக்கோஸ்லாவியாவைஎதிர்வரும் 19ம்திகதி இத்தாலி எதிர்த்து மோதவுள்ளது. இப்போட்டி இத்தாலிக்கு ஒரு பலப்பரீட்சையாக அமையலாம் என அவதானிகள் கருதுகின்ருர்கள்.

### கொலம்பியா தோல்வி

கொலம்பியாவுக்கும் யூகோஸ்லாவியாவுக்குமிடையில் நடைபெற்றகடும் போட்டியில் கடைசி நேரத்தில் கொலம்பியா 0—1 கோல்களால் தோல்வியடைந்தது.

2—0 கோல்களால் ஐக்கிய அரேபியாவை வெற்றி பெற்ற கொலம்பியா, மே. ஜெர்மனியிடம் 4—1 கோல்களால் தோல்வியடைந்த யூகோஸ்லாவயாவிடம் மேற்படி போட்டியில் தோல்வியடைந்துள்ளது.

இப்பிரிவில் [''டி''] எக்கோஷ்டி கால் இறுதியாட்டத்தில் விளையாடத் தகுதி பெறும் என்ற தலைவிதியை எதிர்வரும் 19-ம் திகதி நடைபெறும்ஆட்டங்களின் பின்பே நிர்ணயிக்கப்படும். இப்பிரிவில் மே.ஜெர்மனி, கொலம்பியா, யூகோகஸ்லாவியா ஆகியன தலா இருபுள்ளிகளைப் பெற்றுள்ளன:

### இன்றைய ஆட்டங்கள்

இன்று நடைபெறும் ஆட்டங்களில் 'ஸி' பிரிவில் பிரேஸிலை எதிர்த்து ஸ்கொட்லன்டும், சுவீடனை எதிர்த்து கொஸ்டரிக்காவும் மோதும்.

''எப்'' பிரிவில் இங்கிலாந்தை எதிர்த்து கொலன்ட் மோதும்

இப்பிரிவில் பங்கு பற்றும் இங்கிலாந்து, கொலன்ட், எகிப்து, ஐர்லன்ட் ஆகிய நான்கு கோஷ்டிகளும் இது வரை நடைபெற்ற ஆட்டங்களில் யாருமே தோல்வியடையாத நிலையில் தலா ஒரு புள்ளிகளைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மாணவர்கள் ஓவியப் போட்டி

[யாழ்ப்பாணம்]

மத்திய சூழல் அதிகாரசபையினுல் உயர் பாடசாலை மட்டத்தில் 13 வயது முதல் 17வயதுக்குட்பட்ட மாணவர்கள் கலந்துகொள்ளக்கூடிய பிராந்திய ஓவியப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்திலும் பிராந்திய மட்டத்திலும் இப்போட்டி இரண்டு கட்டங்களில் நடத்தப்படவிருக்கிறது. (153)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியில், இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினுல், பிரேமதாசா வெற்றிக் கிண்ணத்துக்காக நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று யாழ். தெரிவுக் கோஷ்டி – பருத்தித்துறை தெரிவுக்கோஷ்டியை எதிர்த்துமோதும்.

பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகமைதானத்தில், நடைபெற விருக்கும் மேற்படி போட்டி இன்று பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும். (வி)

## இன்று மகாஜனு-ஹாட்லி கிரிக்கெட் போட்டி

(வடமராட்சி)

ஹாட்லிக் கல்லூரிக்கும் மகாஜனுவுக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட பாடசாலை கிரிக்கெட் சங்கம் நடாத்தும் 17 வயதிற்குட்பட்ட மாணவர்க்கான கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது. (51)


ஹரன்
சினிமா
தினசரி 4-00, 6-30. 9-30
சனி, ஞாயிறு
விடுமுறை நாட்களில்
10-30, 2-30 6-30,
9-30
எம். ஜி. ஆர். ஜெயலலிதா அசோகன், சுந்தரராஜன் பண்டரிபாய், சோ நடித்த
தேடிவந்த மாப்பிள்ளை
(புதிய பிரதி)


## மன்னுர் மாவட்ட நீர்விநியோகத் திட்டம் அதிகாரிகள் மத்தியில் ஆராயப்பட்டது

[நமது மன்னுர் நிருபர்]

மன்னுர் மாவட்டத்துக்கு அண்மையில் விஜயம்செய்த புனர்வாழ்வு புனரமைப்பு சமூகநல அமைச்சின் செயலாளர் திரு. சரிதரத்வத்தையுடன் மன்னுர் மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. அ. சுரேஷ் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து மன்னுர் மாவட்டத்தில், நீர் விநியோகத் திட்டங்கள் அமைத்தல், புனர்நிர்மாணம் செய்தல் சம்பந்தமாக நேரில் ஆராய தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்பு சபை பொதுமுகாமையாளர் திரு. சந்திரரத்ன தமது உத்தியோகத்தர்களுடன் மன்னுர் மாவட்டத்துக்கு விஜயம் செய்தார். இவர்களுடன் மன்னுர் அரச அதிபர் ஏ. சி. செபநாயகம், புனர்வாழ்வு திட்டப் பணிப்பாளர் கே. கணேஷ் ஆகியோர் உட்பட தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புசபை திட்டமுகாமையாளர் மற்றும் உள்ளூர் உத்தியோகத்தர்களும் நேரில் சமுகமளித்து முருங்கனில் அமைக்கப்பட்டுள்ள நீர்த் தாங்கி குழாய்க்கிணறு ஆகியவற்றையும் பார்வையிட்டதுடன், மன்னுர், வங்காலை, அடம்பன் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நீர்த் தாங்கிகளையும் பார்வையிட்டு நீர் விநியோகம் சம்பந்தமாக ஆராய்ந்தனர்.

இக் கலந்துரையாடலின் போது வங்காலை, அடம்பன், நீர் விநியோகத் திட்டங்களுக்கு 370 லட்சம் ரூபா தேவை என்று மதிப்பீடுசெய்யப்பட்டுள்ளதாக பொது முகாமையாளர் தெரிவித்தா.

இதற்குரிய நிதியை அரசாங்கத்தினூடாகப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இவ்விநியோகத் திட்டத்தை அமைப்பதற்கு நிதிஉதவி அளித்த நெதர்லாந்து அரசாங்கத்திடம் நீர் விநியோகத்திற்கான உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மன்னுர் நீர் விநியோகத் திட்டத்திற்கு புதிய குழாய்கள் மூலம் இணைப்புக்களை ஏற்படுத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்வதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதால் இவ் வேலைகளை உடனடியாகத் தொடங்கலாம் என்றும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

புதிய குழாய்கள் இணைப்பு வேலைகள் எதிர்வரும் ஜுலை மாதத்தில் நிறைவேற்றப்படும் என்றும், அதன்பின்னர் மன்னுர் நகர மக்கள் தற்போது அனுபவித்துவரும் கஷடங்கள் நீங்கி மேலதிக புதிய இணைப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீர் விநியோகசபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. அ. சுரேஸ், சகல வேலைகளையும் விரைவாகப் பூர்த்திசெய்யுமாறு கோரியதுடன் தலைமன்னுர் எருக்கலம்பிட்டி, விடத்தல் தீவு, தேவன்பிட்டி ஆகிய நீர் விநியோகத் திட்டங்களையும் புனரமைப்பு செய்து திருப்திகரமான நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் வலியுறுத்திஞர்.

மன்னுர் நகரத்துக்கு நவீன வடிகாலமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இச் சபை நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் திரு. சுரேஷ் கேட்டுக்கொண்டார். (85)

## நாளை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

புதுவை அன்பனின் 'வேள்வி நடக்கிறது' நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் புத்தூர் கிழக்கு அண்ணமார் கோவிலடியில் நடைபெறுகிறது.

நூல் வெளியீடும், பிரதிகள் வழங்கலும் திரு. பொன். பூலோகசிங்கம் தலைமையில் நடைபெறும்.

'தமிழ்த்தாய் பதிப்பகத்'தின் முதல் வெளியீடாக இந் நூல் வெளிவருகின்றது.

இவ்விழாவில் செம்பியன் செல்வன். செங்கை ஆழியான். கவிஞர் இ. முருகையன் ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள். (153)

## யாழ்ப்பாணத்தில்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைகாரணமாகக் கோட்டைக்குச் சமீபமாகவுள்ள கொட்டடிப் பகுதியிலுள்ள சில குடும்பங்கள் வெளியேறிவிட்டன.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறைப் பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றிய மட்டக்களப்பு, திருமலையைச் சேர்ந்த சுமார் 20 தமிழ்ப் பொலிஸார் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பவில்லை. இவர்கள் யாழ். ஆஸ்பத்திரிப் பொலிஸ் பிரிவில் கையெழுத்திட்டு அங்கு தங்கியுள்ளனர்.

யாழ் பொலிஸ்நிலையம்கடந்த 11ம் திகதி முதல் இயங்கவில்லை என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. யாழ். பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய சகல பொலிஸாரும் தற்போது ஆஸ்பத்திரிப் பொலிஸ் பிரிவில் தங்கியுள்ளனர்.

யாழ்: மாவட்டத்திலுள்ள மற்றும் பொலிஸ் நிலையங்கள் யாவும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன.

### கொழும்பு பஸ் சேவை

நேற்றுக் காலை கொழும்புக்குத் தனியார் பஸ் எதுவும் செல்லவில்லை. யாழ். பஸ் நிலையத்தில் கொழும்பு செல்வதற்காக நான்கு பெண்கள் உட்பட சுமார் இருபது பிரயாணிகள் 8 மணிவரை காத்திருந்துவிட்டுத் திரும்பிச் சென்றனர். இவர்களில் சிலர் நேற்று முன்தினமும் கொழும்பு செல்லப் புறப்பட்டு பளைவரை சென்று திரும்பி வந்ததாகத் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமன்னார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்முகாம் முன்பாகச் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகள் மீது, இம்முகாம் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்தே நேற்றைய தாக்குதல் இடம்பெற்றதாக விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இம்மோதல் சம்பவத்தின் போது 38க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஒருவர் உயிருடன் பிடிக்கப்பட்டு, தற்போது புலிகள் வசம் உள்ளார். பல இராணுவத்தினர் பலத்த காயங்களுடன் தப்பிச் சென்றனர். முகாமிலிருந்த அனைத்து ரக ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

புலிகள் தரப்பில் புலோமின் என்பவர் தாக்குதலின்போது வீர மரணமெய்தினார். குரு, கொலம்பஸ் உட்பட 9 பேர் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதலை அடுத்துக் காலை 8-00 மணி தொடக்கம் 10 மணி வரை மன்னார்ப் பட்டின சபையைச் சுற்றிப் பரவலாக ஹெலிகொப்டர்கள் தாக்குதலை நடாத்தின.

இதேவேளை, தள்ளாடி முகாமிலிருந்தும் நேற்றுக் காலை 5-00 மணி முதல் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலின்போது அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். பலர் படுகாயமடைந்துள்ளனர். பல கட்டடங்கள், வீடுகள் பலத்த சேதத்திற்கு உள்ளாகின.

மக்கள் பீதியடைந்து அயல் ஊர்களில் தஞ்சமடைந்துள்ளனர். பாடசாலைகள், வியாபார நிலையங்கள், போக்குவரத்துச் சேவைகள் நடைபெறவில்லை.

விடுதலைப் புலிகளில் காயம் அடைந்தவர்களில் நால்வர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (56)

## இன்று

(யாழ்ப்பாணம்)

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இராணுவ நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவசர நிவாரணப் பணிகளை மேற்கொள்வது பற்றி தமிழீழ ஆய்வு நிறுவனம் (றூட்) இன்று மாலை முக்கிய கலந்துரையாடல் ஒன்றை நடாத்தவுள்ளது.

## கொழும்பில் புலிப் பிரமுகர் வீடு சோதனை

(கொழும்பு)

கொழும்பில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் ஒருவரின் காரியாலயம், நேற்று முன்தினம் பொலிஸாரினால் உடைக்கப்பட்டுச் சோதனையிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (153)

## ரெலோ கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு – கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எதிர் கட்சிகள் ஆதரவு வழங்க வேண்டுமென 'ரெலோ' பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட 'ரெலோ' எம். பி.க்களான திரு. திவ்யநாதனும், திரு. கருணாகரனும் இவ்வாறு தெரிவித்தனர்.

## வர்த்தகர்களுக்கு

(2ம் பக்கத் தொடர்ச்சி)

களும், குறிப்பாக பொதுமக்களும் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும். நோயற்று இருப்பதே செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்த வளமான செல்வம்'' என்றும் தெரிவித்தார். (133)

## மரண அறிவித்தல்

### திரு. V. S. கந்தையா

(இளைப்பாறிய பாடசாலை அதிபர், முன்னாள் இணக்க சபைத் தலைவர், கோவிலாக்கண்டி)

கோவிலாக்கண்டியைச்சேர்ந்த திரு. V.S. கந்தையா காலமானார் இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், செந்தில்நாதன் (உதவி வைத்திய அதிகாரி, மாவட்ட வைத்தியசாலை, டிக்கோயா), செந்தில்ராணி (ஆசிரியை, யா/நாவற்குழி மகாவித்தியாலயம்) செந்திற்சோதி. செந்தில்மணி (ஆசிரியை, யா/றோமன் கத்தோலிக்க பாடசாலை, திருநெல்வேலி), செந்தில்குமார் (சுவிட்ஸர்லாந்து), செந்திற்சேயோன் (கனடா), செந்திற்குமாரி (உதவி நூலகர். பொதுநூலகம், நாவற்குழி) செந்தில்ராஜன், செந்திற்செல்வி (சுவிட்ஸர்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திருமதி பவளராணி, திரு. பி. முத்துலிங்கம் (ஆசிரியர், யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்), திரு. கா. இந்திரதேவன் (எழுதுவினைஞர், தம்பிஐயா அன்கோ, யாழ்ப்பாணம்), திரு. இ. பாலகுமார் (ஆசிரியர், யா/ கனகரட்ணம் ம. மகாவித்தியாலயம்), திரு. அ. சோமசுந்தரம் (களனி ஒப்பறேற்றர், கொழும்பு), திரு. க. ஆனந்தராஜன் (சுவிட்ஸர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், குருபரன், அபிராமி, தாட்ஷாயணி, சங்கீதா ஆகியோரின் அன்புப்பேரனும், காலஞ்சென்ற திருமதி சிவபாக்கியம் (சரசாலை), திருமதி அ[illegible] தையல்நாயகி (ஆவரங்கால்), திரு. S. பொன்னுச்சாமி (சரசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற திரு. சி. சந்திரசேகரம் (ஜே. பி.), காலஞ்சென்ற திரு. சி. சிவசுப்பிரமணியம் (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர், கச்சேரி, சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசு), திரு. சி. பொன்னம்பலம் (இளைப்பாறிய அதிபர், புகையிரதநிலையம், தச்சன்தோப்பு) ஆகியோரின் அன்பு மருமகனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் (இன்று) சனிக்கிழமை (16-06-90 காலை 10-00 மணிக்கு கொல்லாங்கிராய் மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க. செந்தில்நாதன்

(சி-3993)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு ஆனி மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100/[illegible]

## பலாலி சுற்று

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை, கட்டுவன், மாவிட்டபுரம், வசாவிளான், குரும்பசிட்டி பகுதிகளை சேர்ந்த 5000 குடும்பங்களே வெளியேறியவர்களாவர்.

இவர்கள் அளவெட்டி, யாழ்ப்பாணம், சாவகச்சேரி பகுதிகளை நோக்கிச் சென்றபடியிருக்கின்றார்கள். தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோவில் மடங்களில் சுமார் 5000 மக்கள் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களுக்குத் தேவையான உதவிகளை தேவஸ்தானம் வழங்கியுள்ளது.

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த யாழ்ப்பாணம் வந்த அமைச்சர் ஹமீத் கொழும்பிற்கு புறப்பட்ட சில மணி நேரத்தின் பின்னர் இந்த ஹெலி ஷெல் தாக்குதல்கள் ஆரம்பமானது.

இராணுவ முகாமிலிருந்து ஷெல் தாக்குதலுடன், ஹெலி தாக்குதலும் ஒரே சமயத்தில் நடந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னரே பலாலி இராணுவ முகாமை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து அதிகமான மக்கள் வெளியேறி விட்டதால், உயிர் சேதங்கள் அதிகம் ஏற்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இத்தாக்குதலில் பலர் காயமடைந்தனர். இரவு நேரமாதலால், காயமடைந்தவர்கள் விபரம் எதுவும் உடனடியாக பெற முடியவில்லை.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சண்முகதாசன் சிவபாக்கியம் (42 வயது), சண்முகநாதன் சிவரதி (14 வயது), சண்முகநாதன் தியாகரன் (வயது 12) ஆகியோர் காயமடைந்து தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் நேற்றிரவு அனுமதிக்கப்பட்டனர். தனியார் மருத்துவ நிலையங்களுக்கும் பலர் அனுப்பப்பட்டு வருகின்றனர்.

## 38 இராணுவம் பலி; அதிகாரி அறிக்கை

வடக்கு, கிழக்கில் நேற்று 24 மணி நேரத்தில் இடம்பெற்ற தாக்குதல்களில் 38 பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மன்னாரில் நேற்று இராணுவ முகாம் தாக்கப்பட்டபோது, 10 இராணுவத்தினர் காயம் அடைந்து அங்கிருந்து கடற்படை முகாமிற்குத் தப்பிச் சென்றதாகவும் அந்த இராணுவ அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## கிழக்கில் இனக் கலவரம்?

இராணுவப் படைகளுக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குமிடையே தொடர்ந்து 5வது நாளாக நேற்று இடம்பெற்ற கடும் சண்டையில் விடுதலைப் புலிகள், இலங்கை இராணுவத்தின் 4 முகாம்களைத் தாக்கியுள்ளதுடன், மேலும் ஒரு முகாமைச் சுற்றிவளைத்துள்ளதாக இந்திய வானொலி அறிவித்தது. இதுவரையில் 250க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாக மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 5வது நாளாக கடும் சண்டை

திருகோணமலையின் கிழக்குப் பகுதியிலும், அம்பாறையிலும் இனக்கலவரம் மூண்டு பலர் கொல்லப்பட்டுள்ளதுடன், வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக இந்திய வானொலி நேற்றிரவு அறிவித்தது இக்கலவரங்களையடுத்து அப்பகுதிகளிலிருந்து பெருமளவு மக்கள் அகதிகளாக வெளியேறுவதாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

## கிளிநொச்சியில் நேற்றும் தாக்குதல்

கிளிநொச்சியில் நேற்றும் கிடையிடையே துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன. இரண்டு ஹெலிகொப்டர்கள் கிளிநொச்சிப் பகுதிகளைச் சுற்றி தாழப் பறந்து இடையிடையே தாக்குதலை மேற்கொண்டிருந்தன.

போக்குவரத்துச் சேவைகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டிருந்தன. பொதுமக்கள் நடமாட்டம் காணப்படாத போதும் விடுதலைப் புலிகளின் ரோந்து நடவடிக்கைகள் மிக அதிகமாகக் காணக்கூடியதாகவிருந்தது.

## பெரியகுளம் முகாமிலிருந்து ஷெல்லடி

வவுனியாவிலும், ஈரப்பெரியகுளம் இராணுவ முகாமிலிருந்தும், நேற்றுக்காலை முதல் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. பல பொதுமக்கள் படுகாயமடைந்தனர். முகாமைச் சுற்றியுள்ள பொதுமக்கள் இருப்பிடங்களைவிட்டு வெளியேறிக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. கடைகள், பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துச் சேவைகள் அற்றநிலையில் மக்கள் காடுகளூடாக நடந்து யாழ்ப்பாணத்தை நோக்கி விரைவதாக தெரிவிக்கப்படுகிறது. (56)

## இறக்காமத்தில் தொடர்ந்து மோதல்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள இறக்காமம் என்ற கிராமத்தில் இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் போராளி சாந்தன் களத்தில் வீரமரணமடைந்தார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பொத்துவிலில் நடைபெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் போராளிகளான டேவிற், ராவ் ஆகியோர் வீரமரணமடைந்தனர். (153)

## 5பொலிஸ் நிலையங்கள்புலிகளிடம்வீழ்ச்சி!

திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஐந்து பொலிஸ் நிலையங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது,

கடந்த 13ந் திகதி திருகோணமலைநகர், உப்புவெளி, கன்னியா, அபயபுரம் ஆகிய பொலிஸ் நிலையங்கள் விடுதலைப்புலிகள் வசமாயின.

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாக இலங்கை அரசின்படைகளுக்கும் புலிகளுக்குமிடையில் கடும் மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

## கந்தளாயில் 10 தமிழர் வெட்டிக்கொலை

நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிவந்த பஸ்சில் பயணம் செய்த தமிழ்ப்பயணிகள் பத்துப்பேர் கந்தளாய் அருகாமையில் வெட்டிக் கொல்லப்பட்டனர் என அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## தமிழர் கடைகள் தீக்கிரை

திருகோணமலை நகரின்பிரதான வீதி மணிக்கூட்டுகோபுரபகுதிகளிலுள்ள தமிழர்களுக்குச் சொந்தமான பல கடைகள் சிங்களவர்களாலும் இராணுவத்தாலும் எரிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

கடந்த 13ந் திகதி தம்பலகாமம் ஜெயபுரவீதியில் மூன்று தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

## பீரங்கித் தாக்குதலில் மூவர் பலி

கடந்த 14ந் திகதி மூதூர் நகரில் நடைபெற்ற பீரங்கிப்படகின் தாக்குதல் காரணமாக மூன்று தமிழர் பலியானார்கள்.

திருமலை-கந்தளாய் வீதியில் 96, 97ம் கட்டையிலுள்ள நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளார்கள்.

நேற்று குச்சவெளி, மூதூர் பகுதிகளில் கடும் மோதல்கள் நடைபெற்றதாகத் தெரியவருகிறது. திருமலை நகரிலுள்ள மடத்தடியில் நேற்றும் மோதல் நடைபெற்றது.

## 3 முகாம் ஆயுதங்கள் புலிகள் வசம்!

திரியாய், தோப்பூர், கிண்ணியா இராணுவமுகாமில் பெருந்தொகையான ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

## இராணுவத்திற்கு பலத்த சேதம்!

மேற்படி முகாமிலிருந்த இராணுவத்துக்கு பலத்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டதாகவும் மிகுதி இராணுவ வீரர்கள் முகாமை விட்டு தப்பிஓடியுள்ளதாகவும் தெரியவருகிறது. (153)

## புனேயில் பீரங்கித்தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களுவாஞ்சிக்குடி, கும்புறுமூலை, கிரான் ஆகிய இடங்களில் தொடர்ந்து மோதல்கள் நடைபெற்று வருகிறது. ஹெலி, பொம்பர் தாக்குதல்கள் இப்பிரதேசங்களில் நடைபெறுவதாகத் தெரியவருகிறது. (153)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org